அமிர்தவசனி

தெய்வீக மாதப் பத்திரிகை

மலர் 4 இதழ் 9 விலை அ.4	Page - 417. நந்தன ஸ்ரீ மார்கழி மீ டிசம்பர்—ஜனவரி—1952-53 18581.	வருட சந்தா ரூ. 2-4-0



பிக்ஷாடன சிவனார் வீதிகளில் வேதம் இசைக்க பின் தொடர்ந்த தாருவன முனிபத்தினிகள் அன்பால் தம்மை அர்ப்பணிக்கிறார்கள்.

(கந்தபுராணச் சித்திர விளக்கம்—43)

பொருளடக்கம்

			பக்கம்
1.	மான சம்ரக்ஷணம்	(திருப்புகழ் மணி) ...	385
2.	மறு பிறவி	(வி. ஆர். ஜி.) ...	387
3.	கடவுள் வழிபாடு	(தென்னாப்பிரிகா ச. மு. பிள்ளை) ...	393
4.	வேலவரும் தமிழும்	(ஸ்ரீ வத்ஸன்) ...	397
5.	அதிசயம் அநேகமுற்ற பழநி	(சே. த. இராமலிங்கம் பிள்ளை) ...	402
6.	ஆத்ம போதம்	(நா. பிச்சுமணி, கி. சுப்ரமணியன்) ...	406
7.	சேக்கிழார் செய்தது	(இளவழகனார்) ...	409
8.	முகுந்த கவிஞர்	(ரசபதி) ...	413
9.	கேட்டாயோ தோழி	(கி. சு. வேதாசலம் பிள்ளை) ...	421
10.	கீதையின் சாரம்	(K. S. சுந்தரமூர்த்தி) ...	426
11.	Greatness	(Thiruppugal Mani) ..	431

பெரும்பெயர் முருகன்

ஆசிரியர்: கி. வா. ஜகந்நாதன்

- அற்புதமான இருபத்தொரு கட்டுரைகள்.
- எல்லாம் முருகன் பெருமையைக் கூறுபவை.
- ஆராய்ச்சி, விளக்கம், வருணனை அநுபவம் என்று பல வகையில் அமைந்தவை.
- நல்ல காகிதம். அழகான அச்சு. உயர்தர பயிண்டு.
- அட்டையின்மேல் மூவர்ணங்களில் முருகனின் அழகொழுகும் திரு உருவப் படம்.

விலை ரூபாய் மூன்று

அமுத நிலையம் லிமிடெட்

தேனாம்பேட்டை :: சென்னை—18.

For **PAPERS** INDIAN & FOREIGN

NEWSPRINT — CREAMLAID — PRINTING BOND — TISSUE — BUTTER — POSTER — ART KRAFT — BOARDS, ETC., ETC.,

Deccan Blue Match, Tea wrapper & Duplicating paper available any quantity

P. S. N. M. Ramalingam Chettiar & Co.

46, ANDERSON STREET, MADRAS-1

PHONE: 55004 - POST BOX 1563 - GRAMS: "DRAWING"

அமிர்தவசனி

தெய்வீக மாதப்பத்திரிகை.

ஆசிரியர்; சு. முத்துஸ்வாமி

எல்லோரும் இன்புற் றிருக்க நினைப்பதுவே
அல்லாமல் வேறொன் றறியேன் பராபரமே

மலர் 4	நந்தன ௵ மார்கழி ௴ டிசம்பர், 1952—ஜனவரி, 1953	இதழ் 9

மானசம்ரக்ஷணம்

(திருப்புகழ் மணி)

தொண்டர்களின் தொலையாச் செல்வம் முருகன். மனத்தை முருகனிடம் அர்ப்பணம் செய்து, அவனே மனதிற்கு ராஜா வென்று கருதும் பக்தர்களுக்கு, அவர்களை விட்டு அகலாத வகையில் தோன்றாத் துணையாய் நிற்கின்றான் முருகன். கடவுள் தொண்டரை இவ்வகையில் காத்து ரக்ஷிக்கும் இயல்பை ராமாயணம், பாரதத்தில் காணலாம். துரியோதனர் கையில் அகப்பட்டு நாடு, நகரம் எல்லாவற்றையும் இழந்த பாண்டவர்கள், தங்கள் மனைவி திரௌபதியையும் சூதாட்டத்தில் இழந்தனர். பழகிய ஐவரும் (பாண்டவர்கள்) கைவிட்டுத் தனியாய் விலகி நிற்கும் தருவாயில் மான பங்கம் செய்து பழிவாங்க நினைத்தான் துரியோதனன். அச்

அன்பரெல்லாம் இன்பம் அருந்திடவும் யான் ஒருவன்
துன்புறுதல் நன்றோ நீ சொல்லாய் பராபரமே.

சமயம் ஸ்ரீ கிருஷ்ண பக்தையான திரௌபதி தன் மனத்தை 'ஹரிஹரி' யென்று கிருஷ்ணனிடத்தில் கொடுத்து விட்டாள். உடலை மறந்தாள். பட்ட மரம் போல் கிருஷ்ணனிடத்தில் பாரத்தைப் போட்டு விட்டு செயலற்று நின்றாள். கிருஷ்ணன் உடனே தோன்றினன். அளவுக் கடங்காத புடைவைகளாகி பக்தையின் மானத்தை ரக்ஷித்தானும்.

மானமே இழந்தவளாய் சாபம் பெற்ற அகல்யையை ஸ்ரீ ராமன் ரக்ஷித்து இழந்த் மானத்தை மறுமலர்ச்சியுடன் வரவழைத்து ஈந்தான். ராம நாம பஜனத்தால் இழந்த பொருள்களும் கிடைக்கப் பெற்றனள். இது ராமாயணம் கூறுவது.

இவ்வாறு நற்கதி யடையும் வழியை கந்தரலங் காரத்தில் புகட்டுகின்றார்.

"மைவரும் கண்டத்தர் மைந்த! கந்தா! வென்று கைவரும் தொண்டன்றி மற்றறியேன், கற்ற கல்வியும் போய், பைவரும் கேளும் பதியும் கதறப் பழகி நின்ற ஐவரும் கைவிட்டு மெய்விடும் போது" ஆண்டவன் தொண்டனை தன் அடைக்கல மாகவே ஆண்டுவிடுகின்றான். திருப்புகழில், "நாளும், ஏறுமயில் வாகன! குகா! சரவண! எனது ஈசா! என் மானம் உனதென்று" ஓதும் ஏழைகள் வியாகுலத்தைத் தவிர்க்கும் பிரான்முருகன் என்றார். பக்தியெனும் சூழ்நிலையில் புகுந்து தெய்வத்தையே தமது நாயகராக கருதப் பெற்றோருக்கு வியாகுலங் கள் வராது. வந்தாலும் அகன்று விடும்; ரக்ஷிக்கப்

சந்ததமும் நின்கருணை சாற்றுவதல் லால்வேறு
சிந்தைஅறி யேன்உன்றன் சித்தம் பராபரமே.

படுவர். ஆகவே ஆண்டவனிடத்தில் மனதைக் கொடுத்து விட்டால் அவமானமெல்லாம் அகன்று, தவமானத்தில் சூழ்ந்திருக்கப் பெறுவர் என்பர் ஸ்ரீ அருணகிரி.

மறு பிறவி

(வி. ஆர். ஜீ)

மறுபிறவி என்பது நாம் இறந்தபின் மறுபடி எடுக்கும் ஜனனம் என எண்ணுகிறோம். நாம் ஒவ்வொரு பகலும் நன்றாக உழைத்து, இரவு நன்றாக நித்திரை செய்து, மறுநாள் காலை எழுவதும் மறுபிறவியே. நாம் ஒரு கொடிய ஜுரத்தினுல் பீடிக்கப்பட்டு பின் அதனின்றும் விடுபட்டு உடம்பு தேறி பழைய நிலையை அடைவதும் மறு பிறவியே. ஒரு தொழிலிலோ, வியாபாரத்திலோ, வேறு எவ்வித முயற்சியிலோ, தோல்வியும் நஷ்டமும் ஏற்பட்டு, அதனுல் சொல்லொணுத் துயரம் அடைந்து, மனம் நொந்து காலக்கிரமத்தில் அதனின்றும் தெளிந்து, சௌகர்ய நிலை அடைவதும் மறுபிறவியே. அனுதினம் நமக்கு ஏற்படும் அதிகோபம், கவலை, குழப்பம், வருத்தம், அதி சந்தோஷம் இவைகளால் அமைதியிழந்து அவஸ்தைப் பட்டு பின்பு ஒருவாறு தெளிவதும் மறுபிறவியே.

நாம் அடிக்கடி செய்யும் பாபங்களையும் தவறுகளையும் உணர்ந்து அதற்காக வருந்தி நம்மை மன்னிக்குமாறு வேண்டி சரணடைந்து அதனுல் ஏற்படும் நிம்மதியும் மறு பிறவியே.

பிறவி என்பது, ஜகத்காரணனை திருமுருகனின் திருவருள் திருவிளையாடல். யாவும் அவரால் சிருஷ்டிக்கப்

நான்நான் எனக்குளறும் நாட்டத்தால் என்னைவிட்டுப்
போனுலும் உன்னைவிட்டுப் போகேன் பராபரமே.

பட்டவையே. முருகன் முத்தொழிலுக்கும் மூலகாரணன். ஜீவராசிகளாகிய நாம் யாவரும் திருமுருகனின் குழந்தைகள். நம் தாயும் தந்தையும் அவரே! நாம் யாவரும் அவர் அருளில் உண்டாகி, அதிலேயே ஒடுங்கும் பரம அணுக்கள் ஆவோம்!

"..............தசைகொண்டு வேய்ந்த அகம் பிரிந்தால்
வேலாற் கிரிதுளைத்தோன் இருதாளன்றி வேறில்லையே!"

என்று இந்த உண்மையை அருணகிரியார் திருவாக்கு தெளிவாக்குகிறது.

நமக்கு முன்னும் பின்னும், என்றும் எங்கும் நிறைந்திருப்பது முருகனின் திருவருள் விலாஸமே. நமக்குள் இருந்து நம்மை ஆட்டி வைக்கும் மனமும், ஐம்புலன் முதலானவைகளும் அதன் சலன ஸ்பாவமும் நம்மால்ஏற்பட்டதல்ல. அதுவும் திருமுருகனின் சிருஷ்டியே. மூவாசைகளில் நம்மை சுலபமாக இழுத்துச் செல்லும் வேகத்தையும் பலத்தையும் அது பெற்றிருக்கிறது. மனதானது பால்யத்தில் விளையாட்டிலும், யௌவனத்தில் விஷயத்திலும், விருத்தாப்பிய தசையில் சபலத்திலும் கிடந்துழலும் ஸ்வபாவமுள்ளது. திருமுருகன் ஸர்வ சாக்ஷியாய் நின்று நம் செய்கைகளைக் கவனித்து வருகிறார். நாம் எங்கிருப்பினும் அவர் நம் கூடவே வருகிறார். நாம் மாயை என்னும் ஆற்று வெள்ளத்தில் மிதந்து செல்லும் ஜந்து. ஒருவித முயற்சியும் செய்யாது சும்மா இருக்கும்பொழுதே, மாயை வெள்ளம் அதன்போக்கில் நம்மை இழுத்துச் செல்லுகிறது! இதுவும் பிரகிருதியின் ஸ்வபாவமே.

நாம் ஜனனமாகும் பொழுதே மரணத்தின் தொடர்பு ஏற்பட்டு விடுகிறது. இவை யிரண்டும் ஒன்றோடொன்று பிணைந்து நிற்கிறது. எவனுக்கு ஜனனத்தில் பிரேமை

நாட்பட் டலைந்த நடுக்கமெலாந் தீரவுனக்கு
ஆட்பட்டுந் துன்பம் எனக் காமோ பராபரமே.

ஏற்படுகிறதோ, அவனுக்கு மரணத்தின் பயம் கூடவே உண்டாகிறது. சுகத்தினால் வரும் ஆநந்தம் நம்மை எவ்வளவு ஆட்டி வைக்கிறதோ, அவ்வளவுக் கவ்வளவு கஷ்டத்தினால் ஏற்படும் துக்கமும் நம்மைப் பன்மடங்கு ஆட்டிவைக்கும். ஒரு பொருளில் அதிகப் பிரியம் வைத்து அடையும் மகிழ்ச்சியைவிட, அதன் பிரிவால் ஏற்படும் துக்கமே மிக அதிகமாயிருக்கும். மனத்தின் செய்கையாலேயே சகல அவஸ்தைகளும் உண்டாகின்றன.

இந்த உண்மையை நாம் அறியமுடியாமல் செய்வது, நமக்கு பிரகிருதி வசத்தால் ஏற்பட்டிருக்கும் நினைப்பு மறப்பு எனும் குணங்களே. நம் மனதில் எல்லாவித எண்ணங்களும் ஆசைகளும் தோன்றித் தோன்றி மறைகின்றன. எதுவும் நிலைத்திருப்பதில்லை. ஒருசமயம் வரும் எண்ணம் மறு சமயம் வருவதில்லை. மாறி மாறி, புதிது புதிதாய், எண்ணங்கள் உதிப்பதும் மறைவதும் இயற்கையாய் இருக்கிறது. இதுவும் பிரகிருதியின் செய்கையே.

இம்மாயை நம்மைப் பீடிக்காவிடில் நாம் நம் அறிவின் உதவியால் விழிப்படைவோம். இவ்வுலகத்தையும் உடலையும் இவ்வளவு பிரேமையாய் நேசிக்கமாட்டோம். உலக வாழ்வு நிலையற்றது என்பதை கண்கூடாகக் காண்போம்! ஜனன மரணம், சுக துக்கம், யாவும் மாறி மாறி வரும் உண்மை புலப்படும்! உலகத்தில் நாம் இச்சைப்படக் கூடிய வஸ்து ஒன்றும் இராது! பகல் இரவு என்னும் நிகழ்ச்சி அடிக்கடி உண்டாகி, நம்மை மூப்பு என்னும் பள்ளத்தில் தள்ள எவ்வளவு வேகமாய்க் கொண்டு செல்லுகிறது என்பது புலப்படும்! ஐம்புலன்களுக்கு வேலையிராது. மனது கலக்கமுறும். தான் இதுவரை கொஞ்சமும் லக்ஷியம் செய்யாதிருந்த அறிவின் தயவை

பாவிபடுங் கண்கலக்கம் பார்த்துமிரங் காதிருந்தால்
ஆவிக் குறுதுணையார் ஐயா பராபரமே.

நாடும். அறிவு தெளிவடையும். உண்மையை அறிய ஆவல் கொள்ளும். அல்லும் பகலும் அதே விசாரத்தில் அழுந்தும். எங்கும் நிறைந்த திருவருளானது யாவையும் ஆட்டிவைக்கும் அதிசயத்தைக் கண்டு களிப்படையும்! உண்மை ஒளி வீசும்! அன்பின் வேகம் பொங்கித் ததும்பும்! இரும்பைக் காந்தம் கவருவதுபோல் திருமுருகன் தன்னருளால் நம்மைத் தன்னிடம் இழுத்துக் கொள்வார்! அவர் நம் உள்ளத்திலேயே கலந்து நின்று காக்ஷியளிப்பார்!! நம்மை அவராக ஆக்கி அளவிலா ஆநந்தத்தைத் தருவார்!!!

"சரி! சரி! நீ சொல்வதெல்லாம் உண்மைதான் எனத் தோன்றுகிறது. இருந்தாலும் இப்படி, 'வாயால் பிரசங்கம் செய்துகொண்டு போவதால் எனக்கு என்ன பலன் கிடைக்கப் போகிறது? நீயோ, மனதையோ, ஐம் புலன்களையோ அடக்க முடியாதெனச் சொல்லிவிட்டாய். அத்துடன் மாயை நம்மை இழுத்துச் செல்வதாயும், நினைப்பு மறப்பை நாம் நீக்கமுடியாது, அது பிரகிருதியின் சிருஷ்டி என்றும் சொல்கிறாய். நாம் சும்மாயிருந்தாலும், மாயை அதன் போக்கில் இழுத்துச் செல்லும் என்கிறாய். இவ்வளவு கஷ்டங்களுக் கிடையில் நாம் எப்படி நல்வழியில் செல்வது? மனது அடங்கிவிட்டால் — ஞானம் — தானுக வரும் என்கிறாய். ரொம்ப சரி! மனதை — எப்படி, எதன் உதவியைக் கொண்டு அடக்குவது? இது, 'யார்' பூனைக்கு மணியைக் கட்டுவது?' என்னும் கதையை ஞாபகப் படுத்துகிற தல்லவா?"

"ஆம்! நீ சொல்வது யாவும் உண்மையே. இருந்தாலும், இந்தச் சுழலி லிருந்து நீங்கி இந்த ஜன்மத்திலேயே சுகம்பெற வழி யில்லாமலில்லை. நிச்சயம் இருக்

நின்னிறைவே தாரகமாய் நின்றுசுகம் எய்தாமல்
என்னிறைவே பாவித்தேன் என்னே பராபரமே.

றது ! தெளிவானதும், சுலபமானதுமான வழி L சொல்லுகிறேன் கேள். மிக்க குளிரினால் நடுக்கமுற்ற ஒருவன் அவ்வவஸ்தை நீங்க எப்படி நெருப்பின் கணகணப்பை நாடுகிறானோ, அதேபோல், மாயையால் ஏற்படும் இடுக்கண் நீங்கி சுகம்பெற, தொண்டர்கள் குழாத்துடன் சேர்ந்து பழகவேண்டும். மெய்யன்பர்களுடன் பழகப் பழக, மனக்குழப்பமும் கவலையும் நீங்கி, அமைதியும் அறிவின் தெளிவும் ஏற்படும். இந்த உண்மையை நாம் நன்கு அறிந்து கொள்வதற்கே அருணகிரியார்

'சூரிற் கிரியிற் கதிர்வே லெறிந்தவன் தொண்டர் குழாம்
சாரிற் கதியன்றி வேறிலை காண்..........."

என்று அருளியுள்ளார். திருமுருகன் தொண்டர்களுடன் பழகப் பழக மனநிம்மதியும், பக்தியும், அன்பும் ஏற்படும். அடிக்கடி திருமுருகன் திருநாமங்களைச் சொல்லச் சொல்ல, கல்லெனும் மனமும் கனிய ஆரம்பிக்கும். குமரன் திருநாமத்தை வாயால் சொன்னாலே போதும். அவனுக்குப் பிறவிநோய் அணுகாது. இதற்கு அத்தாக்ஷி

' முடியாப் பிறவிக் கடலிற் புகார் முழுதுங் கெடுக்கும்
மிடியாற் படியில் விதனப்படார் வெற்றி வேல் பெருமான்
அடியாற்கு நல்ல பெருமாள் அவுணர் குலமடங்கப்
பொடியாக்கிய பெருமாள் திருநாமம் புகல்பவரே"

(கந்தரலங்காரம்)

அடியார் கூட்டத்துடன் பழகுவதால், திருமுருகன் திருப்புகழை நாமும் அவர்களுடன் சேர்ந்து பாடவும், அந்த நாதமயத்தில் நம் அறிவுகூடி, ஆநந்தமும் ஆற்றலும் பெறுவோம். அடிக்கடி நம்மனதிலும் நாவிலும், முரு

நின்னைச் சரண்புகுந்தால் நீகாக்கல் வேண்டுமல்லால்
என்னைப் புறம்விடுதல் என்னே பராபரமே.

கனின் நினைவும் அவன் நாமமும் வந்து வந்து இன்ப ரசத்தை ஊட்டிக் கொண்டே இருக்கும். மனதில் அமைதியும், பொறுமையும் குடிகொண்டிருக்கும். நிலையில்லா இவ்வுலகைச் சுழலேயிட்டு நாம் நிம்மதி என்னும் மறு பிறவிக் கரையை அடைந்துவிட்டதாய்த் தோன்றும். திருமுருகன் அடிக்கடி நம் நினைவில் தோன்றுவார். நம்மை அவர் நடத்தி வைக்கும் உண்மையை அறியும் அறிவைப் பெறுவோம்.

"நித்தமும் ஓதுவார்கள் சித்தமே வீடதாக
நிர்த்தம தாடும் ஆறு...........முகவேளனே"

(திருப்புகழ்)

'கலியுக வரதன்' என்பது கந்தனின் காரணப் பெயர். இக்கலியுகத்தில் கண்கண்ட தெய்வமாய் விளங்குபவன்! பவப்பிணியை நாசம் செய்பவன்! நாம் வேண்டுவன யாவற்றையும் விரும்பித் தருவான்! இது திருமுருகன் மெய்யன்பர்கள் தங்கள் அனுபவத்தில் கண்டு ஆநந்தித்து வரும் விஷயம்"

"ஆஹா! அப்படியா!! சரி!—நான் இன்று முதல் முருகன் அடியார் கூட்டத்துடன் சேர்ந்து பழகி, அவர்கள் அடையும் ஆநந்தத்திலும், அமைதியிலும், லாபத்திலும், பங்கு பெற்று, இப்பிறவியிலேயே மாசற்ற 'மறு பிறவி'யை அடைவேன்.'

'இருட்பெறு மனத்தி னூறும் இருவினை யஞ்சியோட்
விருப்பொடு முண்மை ஞான விளக்கினை யேற்றி வைக்கும்
திருப்புகழ் மணியே! வாழ்க! தொண்டர்கள் குழுவும் வாழ்க!
அருட்பெறு மனர் அமிர்த வசனியும் வாழ்க! வாழ்க!

(வி, ஆர். ஜி.)

பத்த ரருந்தும் பரமக்கம் யானருந்த
எத்தனை நாள் செல்லும் இயம்பாய் பராபரமே.

கடவுள் வழிபாடு

(தென்னுப்பிரிகா—டர்பன். திரு. ச. மு. பிள்ளை அவர்கள்)

கடவுள் வாக்கு மனுதீத கோசர வஸ்து. அதனுல் அவரைக் கண்களால் காண முடியாது. மனத்தினுலும் சிந்திக்க இயலாது. கண், மனம் முதலியவை மாயாகருவி கரணங்கள். முதல்வன் இயல்பு மாயையில் தோய்வதன்று. அதனுல் அவை முதல்வனைக் காணுங்கருவிகளாகா. முதல்வனுடைய சன்னிதானத்தில் இக்கருவி கரணங்கள் முனைத்து நில்லா. அதனுல் எப்படி ஒளியைக் காண்பதற்கு இருள் துணைப் பொருளாகாதோ, அப்படியே முதல்வனைக் காண்பதற்கு மாயா கருவி கரணங்கள் துணைப் பொருளாகா; நினைப்பதற்கும் துணை செய்யா. ஒளியைக் காண்பதற்கு ஒளியுடைப் பொருளே சாதனமாகும். அது போல், அறிவுருவாய் விளங்கும் கடவுளை அறிதற்கு அறிவே சாதனமாகும். அது பற்றியே வாக்கு மனுதீத கோசர மெனப்பட்டது. வாக்கு மனுதீத கோசர மென்றுல், வாக்குக்கும் மனதுக்கும் எட்டாததும், அறிவுக்கு எட்டுவதும் ஆனது என்பது பொருள். வாக்கு என்பது பாசஞானம்; மனம் என்பது பசுஞானம். எனவே, பாச ஞான பசு ஞானங்களுக்கு எட்டாத சிவ ஞானத்துக்கு எட்டுவது என்பது அதன் பொருளாம். இந்த உலகத்திலாயினுமாக, மற்றெந்த உலகங்களிலாயினுமாக, முதல்வனைக் கண் இந்திரியத்தாற் காண வியலாது.

அவருக்கு உருவில்லை; வடிவில்லை; உலகில்லை. அதனுல் அவரை ஓர் உருவாக அமைத்து மனதினுற் சிந்திக்க இயலாது. சிந்திக்க முயலினும் மனத்திற் படுபவரல்லர். அதனுல், அப்பொருளை மனத்தினுற் தியானிப்போம் என்

எண்ணிப்பல் கோடிஉயிர் எத்தனையோ அத்தனைக்குங்
கண்ணிற் கலந்தஅருட் கண்ணே பராபரமே.

பது வீணும். மனத்தின் வியாபாரம் பிருதிவி முதல் சிவ தத்துவம் ஈருன தத்துவங்களினுள்ளும், புவனங்களி னுள்ளுமே வியாபிக்கும். அவர் அதிற் ருேய்பவ ரல்லர். அதனுல் மனுதீத ராகின்ருர்.

ஆன்மா சேதனவஸ்து வாயினும், தானுக விளங்குத லின்றி, வியஞ்சகத்தால் விளங்கும் இயல்பிற்று. கண் ஒளியுடைப் பொருளாயினும் தானுக விளங்குதலின்றி, விளக்கொளி அல்லது சூரியப் பிரகாசம் முதலிய வியஞ் சகப் பொருளால் விளங்குதல் போல, ஆன்மாவும் மாயா கருவி கரணங்களால், அல்லது முதல்வன் அருளால் விளக்கம் பெறும் இயல்பிற்று. முதல்வன் பிரகாச வஸ்துவாயினும், ஆன்மா மல மறைப்பின் மயங்கி முதல் வனைக் காணமாட்டாது. எது போலு மெனில், ஆதித்தன் ஒளியுடைப் பொருளாயினும், அந்தகன் அதனைக் காண மாட்டாமை போலும். ஆதித்த ஒளியை விழியுடையார் காண்பது போல, முதல்வனது பிரகாசத்தை ஞானிகளே காண்பர். விழியுடையார்க்குக் குருடில்லை; ஞானிகளுக் கும் மலமறைப் பில்லை. விழியுடையார்க்கு ஆதித்த வொளியே வியஞ்சகமாய் நின்று ஆதித்தனைக் காட்டும். ஞானிகட்கு முதல்வன் அருளே வியஞ்சகமாய் நின்று முதல்வனைக் காட்டும். 'அவனருளே கண்ணுகக் காணி னல்லால்' என்றதும் அது நோக்கி. ஞானிகளது வழிபாடு சிவஞானந் துணையாக நடப்பது. அதனுல் அவர் ஞானக் கண்ணுற் கண்டு வழிபடுபவர். அவர் வழி பாட்டுக்கு முதல்வனும் எட்டுவன். அதுவே உண்மை வழிபாடாம். ஞானிகளது வழிபாடானது தம்மை விழுங்கிய சிவஞானத் துள்ளே தாமடங்கி ஒடுங்கி யிருத்தல். "ஓங்குணர்வி னுள் ளொடுங்கி யுள்ளத்து ளின்பொடுங்கத், தூங்குவர் மற்றே

அப்பனென்றும் அன்னையென்றும் ஆரியனென்றும் உனையே
செப்புவதும் உன்னிலையின் சீர்காண் பராபரமே.

துண்டு சொல்" என்றதும் அது நோக்கி. குறைந்த பக்குவிகட்கு ஏற்றபடி முறையான ஞான வழிபாடுகளு முள. அவை கேட்டல், சிந்தித்தல், தெளிதல்களாம்.

இனி, இவ்வழி பாடுகள் ஞானிக ளல்லாதார்க்கு இயைவனவல்ல. ஞானிக ளல்லாதார்க்குச் சிவஞானம் வியஞ்சக மாகாது. அவர்க்கு வியஞ்சக மாவது மனமும் வாக்குமே யாம். அதாவது பசுஞான பாசஞானங்களே யாம். அவரது மல மறைப்பே அதற்குக் காரணமாம். ஆயினும், அவரும் முதல்வனை வழிபட்டு உய்ய வேண்டியவ ராகலின், எல்லாம் உணர்ந்து, எல்லாம் வல்ல முதல்வன் அவர் வழி பாட்டுக்குந் துணை செய்வார். அதாவது மனத் தினாலே தியானித்தற்கு ஏற்ற வடிவங் கொள்வர். அது சுத்த மாயா காரியமாகிய மந்திர வடிவமாம். முதல்வன் அதில் தங்கானாயினும், முதல்வனது சத்தி அம்மந்திர வடி வில் தங்கி நின்று, வழிபாட்டை ஏற்று அருள் செய்யும். மனத்தினாலே மந்திர வடிவைத் தியானிப்போர் யோகிகள் எனப்படுவர். மனம் அகத்து ஒடுங்குதலும், புறத்து விரி தலு மாகிய இயல்பினையுடையது. யோகிகள் மனத்தை விரிய விடாது ஒடுக்குதற்கு உபாயமாகப் பிராணாயாம முதலியன செய்வர். அது காலாந்தரத்தில் அப்பியாச மேலீட்டால் நிகழ்தற் பாலது. அவ்வாறன்றி எளிதிலே மனத்தை ஒடுக்கிக் கடவுளை வழிபடுதல் முடிவதன்று ஆதலின், மனத்தாற் செய்யும் யோக வழி பாடும் யாவர்க் கும் அரிதாகும்.

இனி, மானத வழிபாடு செய்ய இயலாதவர்க்கு, இயன்ற அளவில் மானத வழிபாடும், பெரிதும் காயவழி பாடும் செய்யத் தக்க சக்தியுண்டாதலின், அவர் பொருட்

பேசாத மோனநிலை பெற்றன்றோ நின்னருளாம்
வாசாம கோசரந்தான் வாய்க்கும் பராபரமே.

டுக் கடவுள் உருவத் திருமேனி கொள்வர். அவை மூர்த்தி கள் எனப்படும். சிவ சக்தி அம்மூர்த்திகளை அதிட்டித்து வழி படுவோர் வழிபாட்டை ஏற்று அருள் செய்யும். அம் மூர்த்திகள் காலாக்கினி யுருத்திரர் முதல் அநாசிருத ரீறு யுள்ள புவனபதிகளாயும், பஞ்ச கர்த்தாக்களாயும், உமா மகேசுரர், சபாபதி, தக்ஷிணா மூர்த்தி, சோமாஸ்கந்தர் முதலிய வடிவங்களாயும் இருப்பர். இவருள்ளே சதாசிவ மூர்த்தியை அகத்தும் புறத்தும் வழிபடுவோர் ஒரு வகை யர். அவர் கிரியையாளர் எனப்படுவர். புறத்து மாத் திரம், அதாவது காயத்தான் மாத்திரம் வழிபடுவோர் ஒரு வகையர். அவர் சரியையாளர் எனப்படுவர். இச்சரியை கிரியை யிரண்டும் சேர்ந்து சிவ தன்மம் எனப்படும்.

இனி, புவனபதிகளுடைய வழிபாடுகளும் உள்ளன. முதல்வனது சத்தி அவரை யதிட்டித்து நிற்றலின், அவர் வழிபாட்டைச் சிவ வழிபாடாகவே கருதிச் செய்யப்படும். வழிபடு வோரது ஏலாமையை நோக்கிச் சிவம் தனது சக் தியை அவர் மாட்டு நிறுத்தி, அதிகாரம் நடத்த அருள் செய்யும். அது பற்றியே அவ்வடிவும் சிவ வடிவாக எண்ணப்படும். இவ்வாறு வழி படுவோரது வன்மை மென்மைகட் கேற்பச் சிவ வழிபாடும் பல திறமாயிற்று. அப் பலதிறமும், காயத்தால் வழிபடுதலும், மனத்தால் வழிபடுதலும், காயத்தாலும் மனத்தாலும் வழிபடுதலும், அறிவான் வழிபடுதலும் என நால்வகையுள் அடங்கும். இவற்றின் பயனாகிய முத்திகளும் பரமுத்தி, அபரமுத்தி, பதமுத்தி என மூவகைப்படும். இவ்வாறு கடவுள் வழி பாடும், அதன்பயனும் நுணித்துணர நின்றன வென்க.

கற்றாலுங் கேட்டாலுங் காயமழி யாத சித்தி
பெற்றாலும் இன்பம் உண்டோ பேசாய் பராபரமே.

வேலவரும் தமிழும் (2)

(ஸ்ரீ வத்ஸன்)

சுப்பிரமணியக் கடவுளின் சரிதம் பல புராணங்களில் காணப்படினும், ஸ்கந்த புராணம் சம்ஹிதா ரூபமான பிரிவுகளில் சங்கர சம்ஹிதையின் பிரிவாகிய சிவரகஸ்ய கண்டத்தில் தான் தொடர்ந்து கோர்வையாகக் காணப்படுகிறது என்று முன் இதழில் கூறப் பட்டது.

இச் சரிதம் ஆதியில் பிரமன் முதலிய தேவர்கள் முன்னிலையில் அரனால் உமைக்குக் கூறப்பட்டது. பிறகு ஸ்கந்தப் பெருமான் முன்னிலையில் உமாதேவியால் நந்திகேசுவரருக்குக் கூறப்பட்டு, பிறகு வியாச முனியும், பிறகு பௌராணிகரான சூதமாமுனியும் கேட்டு, அவர் வாயிலாக மற்ற முனிவர்கட்குக் கூறப்பட்டதாக வரலாறு.

உமாவின் ஜனனம்

தக்ஷனின் யாகத்திற்குச் சென்ற உமாதேவி தன் பிதாவால் நன்கு உபசரிக்கப் படாதது பற்றி வருத்தமுற்றனள். ஒரு சமயம் அரனிடம் கூறுவாள். இச் சரீரம் அவமதிப்புக் காளானது, இதை வெறுக்கிறேன் என்றனள். இதே சமயம் இமயத்துக்கரசு புத்திரப் பேறின்றி தவம் புரிந்து வந்தனன். அவனுக்கு அருள் புரிய நினைத்த சிவபிரான், உமையை நோக்கி; சரி, இச் சரீரத்தை விட்டு சிசு உருக்கொண்டு இமவான் முன் தோன்றுக. ஐந்து ஆண்டு சென்ற பின், எமைக் கருதித் தவம் புரிக. பிறகு யாம் வந்து ஆட்கொள்வோம் என்றனர்.

வர்ணனைக் கெட்டாத அவ்விமயத்தின் சார்பில் ஓர் தடாகம் உண்டு. அதில் தாமரைகளுமுண்டு. திடீரென

கண்டவடி வெல்லாங் கரைக்கின்ற அஞ்சனம்போல்
அண்டமெல்லாம் நின்னருளே அன்றே பராபரமே.

ஓர் இதழின் மேல் ஓர் அதிசயக் குழந்தை தோன்றலாயிற்று. தவத்தில் ஆழ்ந்திருந்த இமவானின் நோக்கிற்பட்ட அக் குழந்தை பொன்பாவையெனத் தோர்ந்தான். உதய அருணனின் சோதிப் பிழம்பு தோன்றப் பெற்றது அவ்வுருவம். தவம் கலைந்தது. மெள்ளச் சென்று குழந்தையை எடுத்தான். அது லோக மாதாவின் அருள் பிரசாதம் எனக் கருதி விரைந்து இல்லம் சென்ற இம்வரன் தன் பட்டத்தரசி மேனு தேவியிடம் கொடுக்க, யாவரும் புளகாங்கிதமடைந்து, அவரவர் பிறவிப் பயனை அன்றே பெற்றதாகக் கருதி ஆரவாரித்தனர். அதி விநயத்துடன் அவ்வரச குலக் குழந்தை வளர்க்கப்பட்டு வந்தது.

அப் புனிதப் பிறவி வெகு நாட்கள் அங்கு வளரவில்லை. ஐந்து ஆண்டு சென்றதும், அது தவக் குழந்தையாகி தவ வேடம் பூண்டு, ஆதியில் இமயன் தவம் செய்த அதே இமயச் சாரலில் சென்று தவம் புரியத் துவக்கியது.

அரனின் நிஷ்டை

உமாதேவி சென்றதும், சிவபிரான் ஆசானுகி, சனகர், சனந்தனர், சனாதனர், சனத்குமாரர் முதலிய முனிபுங்கவர்கட்கு தம்பதம், தொம்பதம், அசிபதம் (தத்–துவம்–அசி) முப்பத உண்மைகளை விளக்கி, சின்முத்திரையுடன், தக்ஷிணாமூர்த்தி உருக் கொண்டு நிட்டையிலாழ்ந்தார்.

இடையில் சூரபதுமன் எனும் தவவலிவு பூண்ட ஓர் கொடிய அரக்கன் ஆணவ மிகுதியால் இந்திராதி தேவர்களையும் துன்புறுத்தத் தொடங்க, அவர்களும், பிரம்மதேவனை முன்னிட்டு சிவபிரானிடம் சென்று அறிவிக்க, சகஜ நிட்டையிலிருந்த அவரும், ஓர் குமரன் தோன்றி

கொலைகளவு கள்காமங் கோபம் விட்டால் அன்றோ
மலையிலக்கா நின்னருள்தான் வாய்க்கும் பராபரமே.

ஆவன செய்வன் எனக் கூறி, மறுபடியும் தீர்க்க நிஷ்டை நிலையை யடைந்தார்.

தேவர்களின் ஏக்கம்

தேவர்கள் சிந்திக்கலாயினர். என்னே! அரனோ தீவிர நிட்டையில் இருக்குள்ளார். உமையோ தவம் புரிகின்றாள் இமயச் சாரில். இவர்கள் குமரன் எங்குற்றான்! எங்ஙனம் எப்போது தோன்றுவான்? சூரபதுமன் கொடுமை நீங்கும் காலமும் உளதோ என ஏக்கமுற்று ஒருவாறு தெளிந்தனர். இதற்கான மார்க்கம் ஒன்றே யுளது. உமையை அரன் மணக்க வேண்டும். இது லகுவில் நடைபெறக் கூடியதல்ல. இருப்பினும் முயற்சியுடன் துரிதமாக யாவரும் கலந்து கவனிக்க வேண்டும் என்றனர். உமாதேவியை யாவது ஒரு சமயம் தவத்தை நிறுத்தி அரனிடம் செல்ல வேண்டினும் வேண்டலாம். இவ்வரனின் நிட்டையைக் கலைப்பது எங்ஙனம் எனத் திகைத்தனர். பிறகு ஒருவாறு இது மன்மதனால் ஆகக்கூடியது எனக் கருதி அவனை வரவழைத்துச் செப்பலாயினர். சிவபிரான் நிட்டையிற் சென்றதனால் உலகமே சிருட்டியின்றி தவிக்கிறது. காம சிந்தனையே பிராணிகளிடம் இல்லை. எங்கும் தேக்க நிலை காண்கின்றது. எல்லா வற்றிற்கும் மேலான சூரபதுமனின் தொல்லை சகிக்க முடியாத காரியம். தேவர்களின் நாசமே ஏற்படும் போலிருக்கிறது. ஆகவே இதைத் தவிர்க்க மன்மதனால் தான் கூடும் என்றனர். அம்மொழி கேட்ட மன்மதனும் திடுக்குற்றான். ஐயமுற்றான். தனக்கு நாசகால மேற்பட்டதாகவே கருதினான். மன்மத பாணம் செல்லாத இடம் இல்லை. அதைச் சிவபிரான் மீது பிரயோகித்து உயிர் வாழ முடியுமோ, அது தான் நியாயமோ, அது சிவநிந்தை யல்லவா, ஆக அதற்கு யாம்

தன்னை அறியாதுசுகந் தானாய் இருந்துவிட்டால்
உன்னை அறியஅருள் உண்டோ பராபரமே.

மன்மதனின் மறுப்பு

இணங்கோம் என்றனன். ஆலகால விடத்தை உட்கொண்டு சிவபிரானே உலகைக் காக்க முன் வந்துள்ளதைக் கருதி, இத் தருணத்தில் உதவி புரிவதை சிவ கட்டளையாகவே நினைத்து ஒப்ப வேண்டும் என்று மறுமுறை தேவர்கள் வேண்ட, மற்று மோர் முறை மன்மதன் இணங்காமற் போக, பிரும்ம தேவனும் கோபமுற்று சபித்து விடுவதாகக் கூற, சரி நும் சாபத்தினுல் மரிப்பதைக் காட்டிலும் சிவபிரானுல் பரகதி யடைவதே மேல் எனக் கூறி மன்மதனும் இணங்கினுன். தேவர்களும் அஞ்சற்க, யாமும் உனைத் தொடர்ந்து வருவோம், பயமின்றிச் செல் என்றனர். மன்மதனும் இரதியை நினைப்பான். பிறகு மாலை நினைப்பான். இக் கூற்றுக்கு மாலும் இணங்கினரே என்று வருந்துவான். ஒருவாறு திடப் படுத்திக் கொண்டு, சிவபிரான் நிட்டையில் அமர்ந்துள்ள புனித தலத்திற்கு வந்தான். வந்தவன் தன் பாணங்களை மிருகங்கள் மீதும், பக்ஷிகள் மீதும் முதலில் தொடுத்தான். செயலற்றுக் கிடந்த சீவராசிகள் வசந்த கால் வரவை உணர்ந்தது போல் புத்துணர்ச்சி பெற்று ஆரவாரிக்கத் தொடங்கின. பிறகு அப்பாணம் நந்திகேசுவரர் முன்னிலையிலும் தோன்றிற்று. மாசற்ற அவரோ இலக்காவர். பாணங்கள் திரும்பின. வான் நோக்கி எழுந்தன. வியந்தனன் மன்மதனும். அடியில் வீழ்ந்தான். தன் செயலைக் கூறுவான்; தேவர்கள் கட்டளையைக் கூறுவான். மரம்போல் நின்றுன். நந்திதேவரும், இதுவும் சிவ கட்டளையெனக் கருதி, சிவபிரானிடம் செல்ல அனுமதித்தனர் மன்மதனையும்.

ஒன்றிரண் டென்றுன்ற உணர்வுகொடுத் துள்ளபடி
என்றும் என்னை வையாய் இறையே பராபரமே.

மன்மதனின் துணிவு

அரன் சந்நிதியில் சென்றனன் மன்மதனும். அவனது பாணங்கள் நழுவின. நடுக்கமுற்றான்; தன் முடிவை யடைந்ததாகவே எண்ணினான்; மூர்ச்சையும் அடைந்தான். பிறகு தெளிந்தான். சிவனைத் துதித்தான். சிவ கட்டளை யென்றே கருதி சிவனையே மனத்தில் எண்ணி, தனது புஷ்ப பாணத்தைத் தொடுத்தான். மறு முறையும் சிந்தித்தான். இனித் தயக்கம் உதவாது என்றெண்ணி விடுத்தான் சிவபிரானிடம் அப் புஷ்ப பாணத்தையும்.

மன்மதனின் முடிவு

ஞானேந்திரியங்களைக் காக்க இயற்கைத் தடுப்புகள் உண்டு. நேத்திரத்தைக் காப்பது இமை. இது மேலும் கீழுமாக நடமாடும் இயல்பு பெற்றது. சாம்பிராணிப் புகையை விசிறி கொண்டு விசிறினால், முகத்தின் மேல் பட்டு பிறகு மூக்கினிடமாக வரும் போது அது அப்போது அந்த வாசனையை யுணர்கிறது. முகத்தின் பக்கம் வந்த அம் மன்மத புஷ்ப பாணத்தின் வாசனையை இமையாகிய விசிறி நாசியிடம் அவ் வாசனையைப் பரப்பவும், நேத்திரத்தில் படாமல் தவிர்க்கவுமாக இரு காரியங்களையும் கருதி, இயற்கையாகவே சிவபிரானின் மூன்றாவது நேத்திரத்தைச் சார்ந்த இந்த இமையானது சற்றுத் திறந்தது. உடனே மூடிவிட்டது.

அவ்வளவுதான். இங்கு மன்மதனைக் காணவில்லை. பின் அங்கு ஓர் புகை தோன்றிற்று, பிறகு சாம்பற் குவியல்.

எங்கும் பரவிய அப்புகையைக் கண்டதும் நந்தி தேவர் சிவபிரானை வணங்கி, அங்கு வெளியில் நின்ற

கருதும்அடி யார்கள்உளம் காணவெளி யாகுந்
துரியநிறை வான சுகமே பராபரமே.

தேவர்களிடம், மன்மதன் மரித்தான். ஆனால் சிவனருளால் மீளுவான் என்றும் கூறினர்.

தேவர்கள் சிவனைத் துதித்தார்கள். ஆச்சரிய முற்றார்கள். இரதி தேவியோவெனில், தேவர்களை உய்விக்கச் சென்ற ஒருவன் மரிப்பதுண்டோ, இது நியதியோ, இவன் தந்தை மால் செயலற்றானே எனக் கூறிப் புலம்பலானாள்.

இம்மட்டில் சிவபிரானோவெனில் யாதும் அறியாதவர் போல், நிட்டையிலேயே யிருந்து வந்தார்.

மறுபடியும் தேவர்கள் ஏக்கம்

தேவர்கள் கலங்கினார்கள். முயற்சியும் யுத்தியும் பலிக்காதது கண்டு ஏக்க முற்றனர். உமா தேவியிடம் சென்று பிரார்த்தித்து, அவளை முன்னிட்டு சிவபிரானிடம் சென்று புத்திரப் பேறை வேண்டாமல், மதியிழந்து ஒரு தீங்கும் இழைக்காத மன்மதனை இழந்தோமே என்று விசனித்தனர். இனி முயற்சியும் யுக்தியும் சிவபிரானிடம் செல்லாது. பிரார்த்தனை ஒன்றே சிறந்தது எனத் தேர்ந்து யாவரும் துதிக்கலாயினர். சிவ கீதங்கள் பாடினர். சிவ தரிசனத்தை வேண்டி நிற்கலாயினர்.

அதிசயம் அநேக முற்ற பழநி

திருப்புகழ் சதுரர் சே. த. இராமலிங்கம் பிள்ளை, B.A., B.T.,

(249 ஆம் பக்கத் தொடர்ச்சி)

வையாபுரித்துரை :

மெய்யான அன்பு செய்து வேலன் அருள் பெற்றவரில் வையாபுரித்துரை யென்னும் வள்ளலும் குறிப்பிடத் தக்கவராவர். பெரியோர் தம் வரலாறு பிறர்க்குத்

பொய்குவித்த நெஞ்சன் அருட் பொறப்பறிந்து திக்கனைத்துங்
கைகுவித்து நிற்பதெந்தக் காலம் பராபரமே.

தெரிய வேண்டும் என்ற எண்ண முடையவரா யிருந்த தில்லை. பத்திரிகையின் முகப்புப் படமாகத் தம் படம் வரும்படித் தம் புகழைத் தம்பட்டம் அடிப்பது வழக்க மில்லை. இறைவன் அடியாரில் கடையரிற் கடையனாகிய என்னை இவ்வுலகு ஏன் அறிய வேண்டும்? என்ற அடக்க உள்ளம் படைத்த அன்பினரா யிருந்தனர். அதனால் அவர் கள் வரலாறுகள் பல நமக்குக் கிடைக்கவில்லை. அது போலவே நம் வையாபுரிக் கோமான் வரலாறும் தெளி வுறத் தெரியவில்லை. இவரது பெயரால் வையாபுரிக் குளம் என்ற ஏரி ஒன்று பழனிமலைக்கும் ஊருக்கும் இடையிலுள்ளது. தொண்டர்க்கு மல பரிபாகம் வந்த பொழுதே மயிலோன் காட்சி வழங்குதல் போல, மாரிக் காலத்தில் மட்டுந்தான் நீர் நிரம்பிய நிலையுடன் இந்த ஏரி கண் கொள்ளாக் காட்சியாய் விளங்கும்.

பழநி நாதனுக்குப் பால் காவடி செலுத்தும் பண் பாள ரெல்லாம், பக்தி நனி முதிர்ந்து, 'வையாபுரிக்கு அரோஹரா' என்று குரலிட்டழைப்பர். இவையன்றி, கன்ன பரம்பரைக் கதை யொன்று இவர் வரலாற்றை விளக்க வழங்குகிறது.

வையாபுரியின் பொய்யாத அன்பு

வையாபுரிக் கோமான் ஒரு பெரு நிலக் கிழவர். சின் னஞ் சிறு வயது முதல் தென்பழனிச் செல்வனிடம் அன்பு மாறாத உள்ளம் படைத்த உத்தமர்; இருந்தாலும் நடந் தாலும் எங்கெங்குச் சென்றாலும், இரவிலே துயின்றா லும் ஏதேனும் செய்தாலும் மருந்தாகி அருளுதவும் மயி லோனை மறவாதார். காலை மாலை உச்சிப் போதினில் பழனிக் காவலனை ஆலயத்துத் தரிசித்து அருள் பெறும் கடமை பூண்டவர். இதுவன்றித் தன்னில்லத் துறினும்

அத்துவித மான அயிக்ய அனுபவமே
சுத்தநிலை அந்நிலை யார் சொல்வார் பராபரமே.

இலே வேலண்ணல் இன்புகழே ஏத்தி வழிபடு நலத்தின் மிக்கார். சுருங்கச் சொல்லின், அவர் பாடுவதும் பழநி; பரவுவதும் பழநியேயாம்.

பழநிக்குமர னருளிய பண்பு :—

ஒரு சமயம் இப்பேரன்பர் பழநியை நீங்கிச் சில நாட்கள் வெளியூரில் சென்று தங்க நேர்ந்தது. அப்போது தென்பழநி தெய்வ தெரிசனம் தடைப் படுமே என்று எண்ணிய போது அவரது சிந்தை மிக நொந்தது. அக்கவலையே பெரிதாகிக் கண் துயில் கொண்ட கோமான் கனவில் கோல மயில் குகன் எழுந்தருளி, "அன்ப! கவலை வேண்டாம். நீ சென்ற இடங்களி லெல்லாம், சிந்தித்த போதெல்லாம் உன் கண்முன், நாம் காட்சி தருவோம். 'வையாபுரி' என்ற குரலும் கேட்கும். ஆதலால், உன் கடமை யொன்றும் தடை படாது. இனி வேறொன்றும் சிந்திக்காது வெளியூர் செல்லலாம்" என்று உறுதி கூறிப் போந்தனன். கேட்ட அன்பரின் அகமிக மகிழ்ந்தது. அன்பர் ஆண்டவ னருளை பாடியாடிப் பரவினர்.

இளம் பூரணன் இன்னருள் பெற்ற இவ்வடியர் விரும்பிய வாறே வெளியூர் சென்றனர். வெளியூரில் தங்கிய காலமெல்லாம் நினைப்பவை முடிக்கும் நிமலச் செவ்வேள் எங்கே நினைப்பினும் அங்கே எதிர் நின்று காட்சி வழங்குவன். 'வையாபுரி' என்ற அன்புக்குரலும் தவறாது ஒலித்தது. ஆதியுலா பாடிய அருஞ்சொற் பெருந்தகைக்குச் சிலம் பொலி யளித்தனன் சிதம்பரதேவன். அஃதே போலச் சிவகுமரச் செல்வனும் வையாபுரிக்கருளி வாழ்வித்தான் போலும்.

வையாபுரி பெற்றவாழ்வு :

இங்ஙனம் நாட்கள் பல நடந்தன. வையாபுரிக்கு

பூட்டற்றுத் தேகமற்றுப் போகுமுன்னே நின்னருளைக்
காட்டத் தகாதோ என்கண்ணே பராபரமே.

முதுமை மேலிட்டது. பழநி நாதனைப் பரவிடும் அடியர் பலரும் புறத் தூய்மை பெற எண்ணி எடுத்த ஏரி தான் 'வையாபுரி தீர்த்தம்' என வழங்குகிறது. நம் கோமான் இது போன்ற திருப்பணிகள் எண்ணில சீர்பழநிச் செவ்வேட்குச் செய்து முடித்து வாழ்ந்தனர்.

ஓரிரவு பஞ்சணை யமளியிற் கோமகன் படுத்திருந்தனர். பளீர் பளீரென்று பேரொளி விண்ணுற வோங்கி எழுந்தது. ஞானப் பழநிமலை நண்பரெதிர் தோன்றிற்று. அதன் ஓங்கார ஒளி வட்டத்துள் தண்டபாணி தன்னுருக் காட்சி யாயிற்று. "வையாபுரீ" என்ற அன்புக் குரல் அடுத்துக் கேட்டது. வையாபுரியின் கைகள் குவிந்தன; கண்ணீர் ஆறாகப் பெருகியது. வாக்கும் வழக்கப்படி, "தென்பழநித் தெய்வமே! என் பிறவிவேரை என்றறுத் தருள்வாய்?" என்று தழுதழுத்துக் கேட்டது. தண்டபாணி புன்முறுவலுடன், "சத்தியமான பத்தி செய்யன்ப! நம் பாதப் போதில் நீங்கலா அன்பு தந்தோம். எம்மை நீ என்றும் நீங்கலை. என் பழநி இருப்பிலே என்றும் நீ நின்று உறைக. எம்மை வழிபடுவார் உன்னையும் தொழுக. எம்மை அழைப்போர் உன் பெயரால் 'வையாபுரி' என்றே எம்மையும் அழைப்பாராக. அன்னார் வேண்டிய அனைத்தும் அருளுவம்" எனக்கூறி மறைந்தருளினன். வையாபுரியும் ஆனந்த அருவிபாய, "தண்டபாணி! தண்டபாணி! உன் தாள் மலர்க்கே அடைக்கலம்" என்று வாய்விட்டுக் கூறினர். கண்கள் மூடின. கைகள் குவிந்தன; இந்நிலையில் பழநிப் பரமனும் தன் மலையிலிருக்கும் வாழ்வு தந்து மாறா அருள் புரிந்தான். அன்று தொட்டு இன்று வரை பழநிக்குச் செல்வார் 'வையாபுரிக்கு அரோஹரா' என்று அழைப்பது மரபாயிருக்கிறது. வையாபுரித்

சொல்லிற் பதர்களைந்து சொல்முடிவு காணாதார்
நெல்லிற் பதர்போல நிற்பார் பராபரமே.

துரையை வணங்கிச் சென்றால் அடுத்துக் காட்சியளிப்பவர் 'குராவடி வேலர்'. அவர்தம் சிறப்பே அடுத்த இதழை அணி செய்ய உள்ளது.

"வையாபுரிக் கருளும் வண்பழநி நாயகனே! மெய்யா தரித்துனையே வேண்டிடுவ தெக்காலம்". (தொடரும்)

ஆத்ம போதம்

(நா. பிசகுமணி, கி. சுப்ரமணியன், மடுங்கா)

359ம் பக்கத் தொடர்ச்சி

இனிமையும், அமைதியும், கலந்த குரலில் அமைதியைக் கலைத்துக்கொண்டு சிலை, அப்பனே, உயிரற்ற கல்லிற்கும் அவளருளால் வாக்குவன்மை ஏற்படுகிறது என்பதை நிதர்சனமாகக் காண்கிறா யன்றோ! கேள், நீ கேட்க வேண்டுவன கேள்! தயக்கமில்லாது கேள்! உன் சந்தேகங்களறக் கேள்! பொங்கும் ஆழியின் அலை வீசும் சஞ்சலம் தவிர்த்து, அமைதியாய கரைகாணு. ஆழம் புகுந்து, ஞானமாய விலைமதிப்பில்லா, கிடைக்கப்பெறு, இரத்தினங்கள் கொண்டு வருவோம். தேவியின் ஆக்ஞை! எனப் பகர்ந்தது.

மேடைமீது வாக் ஸாமர்த்யமும், அறிவுத் திறனும் மிக்க ஒரு பிரசங்கியின் விடாது கொட்டும் சொல்மாரி போல், பகர்ந்த சிலையின் வார்த்தைகளினால் கவரப்பட்டு, ஆச்சர்யத்தால் மூச்சுவிடக் கூட மறந்துநின்ற என்னைக் கண்டு நகைத்து சிலை மீண்டும் உரைத்தது.

" அன்பனே, ஆண்டவனின் அன்பை அடிப்படையாய்க்கொண்டு அமைந்த அவனி யிதனில் ஆச்சர்யப்படும்படி என்ன இருக்கிறது? எல்லாம் அவனருளாலேயே

அழுக்காற்றால் நெஞ்சம் அழுங்கியபுன் மாக்கள்
இழுக்காற்றால் இன்பநலம் எய்தார் பராபரமே.

இயங்குகிறதன்றோ ! இதில் கஷ்டம் என்று துக்கப் படவோ, ஸுகம் என்று சந்தோஷப்படவோ ஏன்ன இருக்கிறது ? உண்மையில் ஒருவனுடைய ஸுகமே உலகில் மற்றொருவனுடைய துக்கமாக முடிகிறது என்றால், உண்மை ஸுகத்தின் அல்லது துக்கத்தின் இலக்கணம்தான் என்ன ? நாம் ஸுகமென்றோ, துக்கமென்றோ கருதும் இவ் உலக விவகாரங்கள் எல்லாம் உண்மையில் உண்மையல்ல என்பது உண்மையாகின்ற தன்றோ ! இதனால் நித்யானந்தனாய், பிறப்பு இறப்போ, கர்மபந்தங்களோ அற்று, ஸ்வப்ரகாசனாய்த் திகழும் ஜோதிப்பிழம்பாய அப் பரம்பொருள் ஒன்றே ஸத்யம் என்பது வித்தமாகின்ற தன்றோ !

அன்ப ! ஏன் வீணே கலங்குகிறாய் ? உலகில் அறிவற்றவ ரல்லவோ அழியும் சரீரத்திற்கும் அழியா ஆத்மாவிற்கும் பேதம் பல கற்பித்து, தான் வாழும் வாழ்வே நிஜவாழ்வென மயக்கம்கொண்டு, உண்டு, உறங்கி, ஊன் வளர்ப்பதிலேயே உள்ள நேரத்தையெல்லாம் செலவிட்டு அல்லல் படுவார். உலகில் நாம் காண்பன எல்லாம் அவன் மாயையால், நமக்கு வைரம்போல் மின்னி அருகே ஆசையுடன் நெருங்கினால், உண்மையில் கண்ணாடிச் சில்லாக இருக்கும் தன்மை யுடையன. இவ்வாறு மின்னுவது போல் மின்னி நம்மை கணத்திற்குக் கணம் ஏமாற்றும் இந்த உலக வாழ்வின் இன்ப சுகங்களே நமக்கும் ஆண்டவனுக்கும் நடுவேயுள்ள திரை. இப் பலமான மாயத் திரையே குழந்தைகளாய நமக்கு, உலக விஷய போகங்களாய விளையாட்டுப் பொம்மைகளில் மனதைப் பலவந்த

தேகாதி பொய் யெனவே தேர்ந்தவுப சாந்தருக்கு
· மோகாதி உண்டோ மொழியாய் பராபரமே.

மாகத் திருப்பி, பின்னே இருக்கும், அதிசயமான ரூப லாவண்யத்துடன் நம்மை எதிர்நோக்கியுள்ள எம்பெருமானைய், அன்புத் தாயிடமிருந்து நம்மைப் பிரித்து வேடிக்கை பார்க்கிறது. இந்த உண்மையை உணர்ந்து, இவையனைத்தும் விளையாட்டுப் பொம்மைகளே என அறிந்து, நம் தாய்க்காக, அவள் தரிசனத்திற்காக, அவள் அன்பு அரவணைப்பிற்காக, அகமுருகி உள்ளம் குழைந்து அழுவோமாகில், அவளும் தானே திரையை விலக்கிக் கொண்டு, ஓடோடியும் வந்து நம்மை அரவணைப்புள்; நாமும் உண்மைத் தத்வத்தை உணர்ந்து ஆனந்த நிரதர்களாய், சோகமோக வலையி னின்று விடுபட்டவர்களாய், நம் கடமைகளை ஆண்டவன் கட்டளை என்று புரிந்து கொண்டு கவலையற்று கருணை நோக்கிக் காத்திருப்போம்.

இவ்வாறு மெய்ஞ்ஞான மடைந்தோர் உலகோ, அதிலுள்ள சேதன அசேதனைப் பொருள்களோ எல்லாம், தன் மயமாகவும் ஈச்வர மயமாகவும் தோன்றுமே யல்லாது, அதன் பொய்யான நிலையை மெய்யெனக் கொண்டு மயக்கமடைய மாட்டார். இப் பெறமுடியாப் பெரும்பேற்றை அடைந்தோன், அகந்தை வசப்பட்டு அனைத்தும் மாயை என அரற்றி ஆன்றோரை அவமதியான். அறியாமையும், சோம்பேறித்தனமும் அவன் நிற்கும்வழி நில்லா. மோக வலைகளோ, தானே அறுபட்டுப் போம். தன் விரோதிகளுக்கும் மனதினல் தீங்கு நினையாது எப்பொழுதும் மெய்ஞ்ஞானப் பேரின்பத்திலேயே திளைத்திருப்பான். இவ்விதம் உறுதி, நம்பிக்கை, இன்சொல், அன்பு, பக்தியாய செங்கற்களால் எழுப்பப்பட்ட கோயிலையே ஆண்டவனும்

ஒன்றுமறியா இருளாம் உள்ளம் படைத்தஎனக்கு
என்று கதிவருவ தெந்தாய் பராபரமே.

உவந்து விரும்புகின்றான். இதுவே மானிட வாழ்க்கையின் வெற்றியாகும்'' என்று அழுத்தமான குரலில் புகன்றது.

(தொடரும்)

சேக்கிழார் செய்தது

(இளமுருகனார்)

(318-ஆம் பக்கத் தொடர்ச்சி)

திருவாரூருக்கு வரும்படி நம்பியாரூராருக்கு இறைவன் கூறியதும், திருவாரூருக்கு வந்தபின் அவருக்குத் தம்மைத் தோழராகத் தந்ததும் ஒரு குறிப்பை உட்கொண்டவை; அது பரவையார் திருமணக்கருத்தை உட்கொண்டது.

கயிலையில் காதலித்த சேடிமாரில், கமலினி என்பவர் திருவாரூரில் தோன்றிப் 'பரவையார்' என்னும் பெயருடன் வளர்ந்து, இறைவியின் அன்பில் தலைசிறந்து, அப்போது விளங்கி யிருந்தார். அவர் அன்பு தெய்வ நலத்தில் தோய்ந்திருந்ததனால் பதியிலார் குலத்தில் அவர் தோன்றும்படி நேர்ந்தது. உலகத்தில் தமக்கென வேறு தலைவரை நாடாமல் தெய்வத்திற்கே தமது அன்பைப் பெருக்கி நிற்போர் ஆதலால், அத்தகையோர் பதியிலார் எனப்பட்டனர். கணவன் இல்லாதவர் என்பது அதன் பொருள்; தெய்வத்தையே பத்தி செய்யும் அடியார் குலம் என்பது அதன் கருத்து. அத்தகைய நற்குலம் இடையே தவறிய நிலையில் வழுவி விட்டதனால் அக்குலம் மதிப் பிழந்து போய்விட்டது.

சிந்திக்குந் தோறுமென்னுள் சிற்சுகமாய் ஊற்றூறிப்
புந்திக்குள் நின்றஅருள் பொற்பே பராபரமே.

பரவையார் அக்குலத்தின் நற்கருத்துக் கேற்பபடி குழந்தைப் பருவத்திலேயே விளையாட்டுக் காலங்களில் கூட,

"பாடும் இன்னிசையும் தங்கள் பனிமலை வல்லி பாதம்
கூடும்அன் புருகப் பாடும் கொள்கையோர் குறிப்புத்
தோன்ற"

விளங்கிவந்தார். அழகோ அள்ளுதற்கு அமைத்த பொற்பு! நாள்தோறும் திருவாரூரில் பூங்கோயில் சென்று வணங்கி வருவார். ஒருநாள் முன்னைவினை கடைக்கூட்ட ஆளுடைய நம்பிகள் பரவையாரைக் கோயிலில் கண்டார். உடனே வேறு நினைவு எதுவும் அவருள்ளத்தில் நிலவாமல் பரவையார் நினைவே மிகுந்து எழுவதாயிற்று. அருளையே நினைத்துவந்த நம்பியாரூரர், இவ்வம்மைமயை இறைவன் அருளோ என்று அதிசயத்தார்.

தெய்வ பத்தியினாலும் முன்னை நலத்தாலும் பரவையார் தோற்றம் அத்தகைய சிறப்பில் திகழ்ந்தது. இறைவன் திருவருளை அல்லாமல் வேறு எதனையும் நினையாத நம்பியாரூரரின் உள்ளத்தையே அவ்வளவு கவரும்படி இருந்ததற்குக் காரணம் அவரது தெய்வ அன்பே என்று ஒன்றாய் நிறுத்துக் கூறலாம். சேக்கிழார் 'மூவுலகின் பயனாகி முன்னின்றது' என்று விளக்குதலால் இதனைத் தெளிந்து கொள்ளலாம். மூவுலகின் பயன் தெய்வத் திறமை அல்லது வேறில்லை யாதலால் என்பது.

பரவையார் உள்ளமும் சுந்தரர் உள்ளத்தைப் போல் அயலறியாத இயல்புடையது. அவரும் அதே நேரத்தில் நம்பியாரூரரைக் காணும் பேறும் ஒரு வேட்கையும் அடை

குற்றங் குறையக் குணமே லிடஅருளை
உற்றவரே ஆவிக் குறவாம் பராபரமே.

யப் பெற்றார். நாணம், மடம், அச்சம், பயிர்ப்பு என்னும் பெண்மைப் பண்புகளையும் கடந்து ஒரு வேட்கை அவருக்கு எழுதுவதாயிற்று. என் மனம் திரித்த இவன் அண்ணல் மெய்யருள் பெற்றுடையவனே என வியந்து நினைந்தார்.

ஒரே நேரத்தில் இருவர் உள்ளமும் இவ்வாறு ஒன்று பட்டது திருவருள் சம்மதமென்று தெளியும்படி இருந்தது.

பரவையார் இக்குறிப்புடன் கோயிலுக்குச் சென்ற பின், நம்பியாரூரர் அங்கே அருகிருப்பவரைக் கேட்டு, அந்நங்கையின் பெயர் நிலை முதலியவைகளை அறிந்து கொண்டார். இறைவன் நம்மையாட் கொண்டவர் ஆனமையால், அவர் அருள் கொண்டே இந்நங்கையை அடைய வேண்டும் என்று கருதி, அவரும் பெருமானை வணங்கச் சென்றார்.

வணங்கிக் கொண்டபின், அவருள்ளம் பரவையாரைத் தேடிற்று.

"பாச மாம் வினைப் பற்றறுப் பான் மிகும்
ஆசை மேலும் ஓர் ஆசை அளிப்பதேர்
தேசின் மன்னிஎன் சிந்தை மயக்கிய
ஈசனார் அருள் எந்நெறிச் சென்றதே"

இறைவன் திருவருளே இந்நங்கையார் என்று அவர் நினைத்துத் தேடிய நிலை, இச்செய்யுளால் நன்கு விளங்குகின்றது. ஐந்தெழுத்து உணராத அறிவிலிகளின் நெஞ்சத்தைப்போல் மாலைக்காலம் இருண்டது. குற்றமற்ற நெஞ்சுடைய வன்றொண்டரே இவ்வாறு வருந்தினால், மற்றவர்

சொல்லுஞ் சமயநெறிச் சுற்றுக்கு ளேசுழலும்
அல்லல் அழிவ தென்றைக்கு ஐயா பராபரமே.

யார் பிழைப்பார் என்று, இரவு என்னும் நங்கை ஏளனமாய்ப் புன்முறுவல் கொண்டது போல, நிலாவும் தோன்றிற்று.

பரவையாரும் சுந்தரரும் ஒருவர் உள்ளத்தில் ஒருவர் நின்றவராய், அவரவர் இல்லத்திலிருந்து, அன்றிரவெல்லாம் வேட்கை மீதூர்ந்து, இதற்கு வாயில் என்ன என்னும் ஏக்கத்தால் பெரிதும் வருந்தினர்.

பரவையார், சேடிமாரின் வாயிலாக நம்பியாரூரரை இன்னாரென்று அறிய அறிய, மேன்மேலும் அன்பு ஓங்கியது. 'சைவ முதல் திருத்தொண்டர், தம்பிரான் தோழனார், நம்பி' என்று கேள்விப்பட்டு, 'எம்பிரான் தமரோ இவர்' என்னும் ஆர்வங்கொண்டார். இறைவனே இவரை அடைவிக்க வேண்டும் என்று கருதியவராய், 'விடை மேல் வருவீர்! உமது அன்பிலர் போல்-யானோ உறுவேன்?' என்று பரவையார் இறைவனை உருகி வேண்டிக் கொண்டார்.

இருவர் உருக்கமும் அறிந்த இறைவன், அவ்வூர் அடியவர்கள் அறியும்படி அவர் திருமணத்தை முடித்து உதவுமாறு அவரவர்கட்கும் வாக்கு அருளினார். மறுநாள் காலையில் அனைவரும் ஒருங்கு குழுமி, நங்கை பரவையாரை நம்பியாரூரருடன் இறைவன் திருமுன்னிலையில் திருமணஞ் செய்வித்தனர்.

தன்னையா ளுடையபிரான் சரணார விந்தமலர்
சென்னியிலுஞ் சிந்தையிலும் மலர்வித்துத் திருப்பதிகம்
பன்னுதமிழ்த் தொடைமாலை பலசாத்திப் பரவையெனும்
மின்னிடையாள் உடன்கூடி விளையாடிச் செல்கின்றார்.

பிடித்தநிலையே சாதிக்கும் பேரா ணவத்தை
அடித்துத் துரத்தவல்லார் ஆர்காண் பராபரமே.

முகுந்த கவிஞர்

ரசபதி

திக்கெல்லாம் புகழும் பெருமை திருநெல்வேலிக்கு உண்டு. அதைச் சார்ந்து, தமிழகம் மதிக்கும் தனிச் சிறப்புடையது ஸ்ரீவைகுண்டம். ஊரின் பாதிப் பாகம் வைகுந்தம்; பாதிப் பாகம் கயிலாயம். இந்த அருமை யுடையது அப்பதி. முதலிமார் கோட்டையுடன் சரித்திரப் பிரசித்தி பெற்ற கைலாயத்தில் பிரவேசிக்கிற போதே, சிவத்தைத் தரிசிக்கக் கயிலாயம் சேர் கின்ருேம் என்னும் உணர்வு நம்மில் உண்டாகிறது. அப்படியே ஸ்ரீ வைகுண்டத்தில் நுழைந்ததும், பரமபத நாதனைச் சேவிக்க வந்திருக்கிருேம் என்று உவகை மிகுந்து புளகிக்கிறது நம் உடல்.

இந்த அற்புத தலத்தில், முன்ஞெரு காலத்தில் இருந்தார் ஒரு அன்பர். அவர் கலையுணர் புலவர். கல்லும் உருகப் பாடும் கவிதா சக்தி மிக்கவர். திருமாலடியார். அவர் திருப் பெயர் முகுந்தர். இடையருது முகுந்தா முகுந்தா என்று அவர் வாய் ஓயாது ஓதும்; அதனுல் இப்பெயர் அமைந்திருக்க வேண்டும் என்பது ஆய்வாளர் எண்ணம்.

சமய பேதம் காணுத சதுரர்; எல்லாச் சமயமும் ஒரே பரத்தை நாம ரூபம் கற்பித்து ஆராதிக்கிறது என்பது அவர் எண்ணம். திவ்ய தேச யாத்திரையை விரும்பி, ஒவ்வொரு ஸ்தலமாக தரிசித்துக் கொண்டே போகிருர். திருச்செந்தூரை யடைந்தார்.

அலைமோதுகிற கடல் கரையில் ஆறுமுகன் திருக் கோயில்; ஆலயத்தைச் சார்ந்து ஒரு ஆஸ்ரமம். சிறந்த யோகியார் ஒருவர் சொற்பொழிவு நடைபெறுகிறது. அதில் நம் முகுந்தரும் கலந்து கொண்டார்.

எவரும் விழைவது இன்பம்; இலவுலக இன்பமோ நீடித் திருப்பதில்லை. களிப்பும் கவலையும் வாழ்வில் கலந்து வருகிறது. ஆணவ மாயத்தால் மக்கள் மெய்ம்மையை மறந்தனர்;

நேசத்தால் நின்னை நினைக்கும் நினைவுடையார்
ஆசைக் கடலில் அழுந்தார் பராபரமே.

இருளை விழைந்தனர்; அருளை யிழந்தனர்; அன்பை அவலம்பித் தனர்; தலைவனை மறந்தார்; தன்னையும் அறியார்; தடுமாறுகின்றார்.

கருக்குழி ஆரம்பம் ; புதைகுழி முடிவு. கவலைக் குடிலான உடலில் குடிபுகுந்திருக்கும் ஆன்மாவிற்குப் புறவிருள் போக்குபவன் ஆதித்தன்; அக இருள் அழிப்பவன் ஆண்டவன். அந்த அமலனை யடைய சமய உலகம் ஒவ்வொன்றும் ஒவ்வொரு சாதனையை மேற்கொண்டுளது; அதனதன் அளவில் ஒவ்வொன்றும் உயர்ந் தது. முனைப்பை யகற்றி, சாதனையை மேற்கொண்டவரே மேலோர் என்று பேசியபடியே இருக்கிறார் சிவயோகியார். யோகியார் சொற்பொழிவு, முகுந்தர் மனத்தை வசீகரித்தது; கற்றவரைக் கற்றவரே காமுறுவர் அல்லவா! யோகியார் பாத கமலங்களில் முகுந்தர் வீழ்ந்தார். அவரை யாசீர்வதித்து, யோகியார் தன் அண்மையில் அமர வைத்தார்.

அன்று முதல் தம் கருத்தைத் தழுவிய சிவ யோகியாரிடம் நெருங்கிப் பழகினார் முகுந்தர். விநயம் கண்டு அவர் மேல் அன்பு செலுத்தினார் யோகியார். நாள் சில நடந்தன.

ஒருநாள் யோகியார், முகுந்தருடைய வரலாற்றை விசாரித் தார்.

என் ஊர் வைகுந்தம். சிறிதளவு கற்றிருக்கிறேன்; அதை யொரு பொருளாக்கி, என்னிடம் கற்றாரும் கற்க முயல்வாரும் பலர் உளர். மணம் செய்து வைக்க பெற்றோர் இல்லாக் குறை யால், பிரமசாரியாகவே இருந்து வருகிறேன் என்றார் முகுந்தர்.

என் மனையாளும் இறந்தாள். ஒரு மகள் உண்டு; அவளைத் தக்க வரனிடம் ஒப்படைத்த பின், யாத்திரை மேற் கொள்ள உத்தேசம் என்றார் யோகியார்.

ஸ்வாமி! என்னைவிட தங்கள் மகள் பாக்யசாலி. எனக்குப் பெண் பேச ஆளில்லை. உலகம் போற்றும் யோகியான தங்கள் மகட்கு வரன் தேட இருக்கிறீர்கள் நீங்கள்!

இருந்து என்ன பலன்? போலி உலகம் சீர் வரிசையை எதிர்நோக்கும் அதற்காக யானோ எவரிடமும் கையேந்த மாட்

சென்றவிட மெல்லாந் திருவருளே தாரகமாய்
நின்றவர்க்கே ஆனந்த நிட்டை பராபரமே.

டேன். இந்நிலையில் என் மகளை மணக்க அவ்வளவு சுலபமாக எவன் வருவான்?

அப்படியா! அடா பாவமே! நான் மட்டும் சைவனு யிருந்தால் தங்கள் கவலையை யின்றே மாற்றி விடுவேன் என்றுர் முகுந்தர்.

ஓ! உமது எண்ணம் எமக்குப் புரிகிறது. அதுபற்றிய பேதம் எனக்கு இல்லை. உமக்கு சம்மதமானுல் நாளையே நல்ல நாள் என்றுர் யோகி.

அடியேன் சித்தம் என்று பதில் வந்தது.

முன்பின் யோசித்திலர்; சிலரை வைகுண்டத்திற்கு அனுப்பி, முகுந்தர் குணுதிசயங்களை யறியவேனும் முயன்றிருக்கலாம்; அவர் துறவு மனத்த ரல்லவா! அதனுல் அதில் சிந்தனையே செல்லவில்லை.

திருச்செந்திலான் திருமுன் திருமண ஏற்பாடு. ஆரவாரம் வேண்டாம் என்று எவ்வளவு எச்சரிக்கையா யிருந்தும், செய்தி யறிந்த ஊரார், பங்குகொண்டு, திருமணத்தைத் தம் செலவில் விமரிசையாக நடத்தி வைத்தனர். 1000-ம் பொன்முடிப்பை, சிவயோகியாருடைய சீடர்கள், அன்பொடுதம்பதிகட்கு அளித்தனர்.

பெண்ணும் வந்தது பொன்னும் வந்தது. மணம் நிகழ்ந்த மறுநாளே, அழகும் அறிவும் நிறைந்த குணவதியுடன், பெருமித நடை நடந்து முகுந்தர் வைகுந்தம் அடைந்தார்.

திருமாளிகை எய்தியதும், நீராடி யாகட்டும் என்று புழக்கடைக் கிணற்றைக் காட்டினுர். சென்ற குணவதி நீராடி, பூஜா கிருகத்துள் புகுந்தாள். சிறிது நேரம் சென்றது.

நீங்கள் நீராடலாமே என்ற குரல் கேட்டு, முகுந்தர் நிமிர்ந்தார். திடுக்கிட்டது அவர் மனம். என்ன செய்தி? மனையாள் நெற்றியில் திருநீறில்லை; அதற்குப் பதில் திருமண் மிளிர்ந்தது.

என்ன இது? ஏன் திருநீறு இல்லையா என்றுர்.

அது என் அத்தர் இல்லத்தில். எனக்குத் தெய்வமாக அமைந்த தங்கள் கொள்கையைத்தானே இனியான் கடைப்பிடிக்க வேண்டும்!

வானுதி தத்துவமாய் மன்னிநின்ற காரண! நீ
நானுகி நிற்பதெந்த நாளோ பராபரமே.

அடடா! சின்னம் நல்லதுதான்; எனக்காக மாற்ற வேண்டாமே! அவரவர் பழக்கத்தை, அவரவர்கள் கையாளல் தானே நலம் என்றார் முகுந்தர். அதற்குப் பதிலே இல்லை.

இவட்கு ஒன்றுமே சொல்லவேண்டாம் போல் இருக்கிறதே! சரி சரி. குறிப்புணரும் குணவதிதான்; அதுவும் ஒரு நன்மைதான் என்று எண்ணியது முகுந்தர் இதயம்.

வரவர, 'குணத்தினால், அழகால், குணங்கள் அறிந்து இனிது ஊட்டும் வணக்கினால், அறிவால் என் மனையாளுக்கு இணைகாணேன்' என்று பாடியது அவர் வாய்.

சைவ மகளை மணந்தார் என்று, விறு விறுத்தது வீர வைஷ்ணவம். சிவயோகியார் மகளை மணந்து, அவள் நெற்றியில் திருமண் இடவைத்தார் என்று சீறியது சைவம். இப்படி யிரு திறமும் பகை பரப்ப, ஸ்ரீ வைகுண்டத்தில் அவர்க்கு ஆதரவு குறைந்தது. அதனால் வறுமை குடும்பத்தில் வளர்ந்தது.

குருகூரில் உள்ள மாணவர் பலரை நம்பி அவ்வூரில் குடியேறினார் முகுந்தர். அவர் எதிர்பார்த்த ஆதரவு, அங்கு அதிகரித்தது.

வறுமை யகன்றது. எனினும், திருமணம் நிகழ்ந்து ஏழு ஆண்டுகளாகியும், பேர் சொல்லப் பிள்ளை யில்லை யென்னும் சிந்தனை பிறந்தது. மணி மந்திர மருந்து ஒன்றும் பயன்தரவில்லை. அதனால், வரவர கவலை வளர்ந்தது. கணவர் மனநிலை யறிந்து, அவர் எண்ணம் நிறைவுற அருள் என அமலனை யேத்தி, நாள்தோறும் மனமுருகிப் பிரார்த்தித்து வந்தாள் குணவதி.

ஆக்கையை கணவனுக்கு அளித்தாள்; இதயம் செந்திலானிடம் இருந்தது. இதை எவரும் அறியார்.

ஒருநாள் குணவதி, பூஜை யறையுள் புகுந்தாள். தியான காலம். உள்ளொளி கிளர்ந்தது. அதனுள் ஒரு வேல். பரம திருச் செந்திலானை உன் கணவன் பாடுவனேல், மனக்கவலை மாற ஒரு மைந்தன் பிறப்பான் என்ற உத்தரவு உதயமாயது. உடனே அக்காட்சி

நித்திரையாய்த் தானே நினைவயர்ந்தால் நித்தநித்தம்
செத்தபிழைப் பானதெங்கள் செய்கை பராபரமே.

யகன்றது. கண் விழித்த குணவதி, செந்தில் திசை நோக்கிக் கைகுவித்தாள்.

ஒப்பாரும் இல்லாத ஓங்கார மூர்த்தி! செந்திலில் உள்ள வரை நாடோறும் உன்னைச் சேவித்தேன்! மணம் நிகழ் நாள் முதல் உன்னாலயத்தை மறந்தேன்! இந்த அபாக்யவதியை, உன் திருவுளம் ஒரு பொருளாக்கி அருளியதே! உன் அருள் நீடூழி வாழி என்று வாழ்த்தி யெழுந்தாள்.

கணவரிடம் இதை யெப்படி உரைப்பது? விளைவு யாதாயினும் ஆக! பரமன் கட்டளையைப் படித்துவிடுவம் என்று உறுதி கொண்டது உள்ளம்.

பகல் உணவு முடிந்தது. தாம்பூலம் மடித்துத் தந்தாயிற்று. ஸ்வாமி!

ஏன் என்ன செய்தி?

நாக் கூசுகிறது! அஞ்சுகிறது நெஞ்சம்!

ஓஹோ! ஏது பீடிகை பலமாயிருக்கே! நான் இருக்கப் பயம் ஏன்! தைரியமாகச் சொல்.

இறைவனை யெண்ணி இருந்தேன்; என்னிலிருந்து கடவுள் எழுந்ததாக ஓர் உணர்வு உதித்தது.

அப்படியா! அடடா! அதன் பிறகு?

சேவகச் செந்திலானைத் தாங்கள் பாடினால், சேய் பிறப்பது திண்ணமாம்,

அவ்வளவுதான், துள்ளி யெழுந்தார் முகுந்தர். அடி பாவி! என்ன துணிவு உனக்கு! வேதம் காணா விமல முருகன் உனக்கு அவ்வளவு எளிதாக ஆயினனு! கனிவொடு அளித்த கட்டளை யென்று எவ்வளவு பெரிய பொய்? என்று சீறினர்.

உடலாட்டம் கொண்டது குணவதிக்கு. மறைப்பது ஆகாது என்று விளைவை விளம்பினேன் என்று கண்ணீர் பெருக்குவாளை, ஏறெடுத்தும் பாராது வீட்டை விட்டு வெளிப்பட்டார்.

இன்பநிட்டை எய்தாமல் யாதெனினுஞ் சென்றுமனந்
துன்புறுதல் வன்பிறவித் துக்கம் பராபரமே.

ஊரெல்லாம் மனம்போன போக்கில் சுற்றினர். இரவு 10 மணிக்கு வீடு திரும்பினர். அறையுண்ட வேங்கைபோல் இருந்தது அவர் நிலை.

உணவை மறுத்துப் படுத்தார். உறக்கம் வரவில்லை. உள்ளதே குணவதி உரைத்தாளா? குழந்தைமேல் வைத்த பற்றால், செந்திலானைப் பாடினால் பிள்ளை பிறக்கும் என்ற ஊகத்தால் உரைத்தனளா? சிந்தனை பெருகுகிறது; புரண்டு படுக்கிறார்.

விடியற் காலம் 4 மணி. அப்போதுதான் நித்திரை ஆரம்பித்தது. எழுந்திரு! ஏமாறுதே! பகல் 12 மணிக்கு ஆலந் தோப்பிற்குப் போ! அங்கிருப்பாரை, யார் நீங்கள்? எங்கிருந்து வருகிறீர்கள் என்று கேள்! என்னும் அவ்வளவில் கனவு அகன்றது. கண்விழித்தார்.

என்ன வியப்பு! கனவு நனவாகுமோ? போய்த்தான் பார்ப்போமே என்ற நினைவு எழுந்தது.

பகல் 11 மணிக்குச் சரியாகப் புறப்பட்டார். ஆலந்தோப்பில் தம்பதிகள் இருவர் தங்கி யிருக்கிறார்கள். தாய் மடியில் ஒரு சேய். அவர்களைக் கண்டார். யார் நீங்கள்? எங்கிருந்து வருகிறீர்கள் என்றார். ஐயா! பலநாள் புத்திரப் பேறின்றி வருந்தினோம்; செந்திலானைப் பிரார்த்தித்த பயனாக, இச் சேய் பிறந்தது. பிறந்த மூன்றாம் மாதத்தில், காணிக்கை சமர்ப்பித்துத் திரும்புகிறோம் என்றார்கள் அத்தம்பதிகள்.

குணவதிக்குக் கூறிய கட்டளை, கனவுக் காட்சி, அநுபவ கனவு மொழிகள் மூன்றும் மனத் திரையில் நிழலிட்டன. முன்பிருந்த புத்திர தாகம், மேற்படி மூன்றுடன் உறவாடியது.

வீடு திரும்பினர். நடந்ததை மனைவியிடம் நவின்றார். பாட மறுத்த என்னைப் பாடத் தூண்டுவானைப் பாடித்தான் பார்க்கிறேன் என்றது அவர் வாய்.

பிள்ளைவரம் விரும்பிப் பேசுகின்றேன் நின்பெருமை
துள்ளுமயில் சேவலுடன் தோன்றியே—அள்ளொளிவேல்
ஏந்தி யிருபாங்கில் எம்அன்னையர் புன்னகைசெய்
சேந்தா நினதருளைச் செய்.

பொய்யகல மெய்யான போதநிலை கண்டார்க்கோர்
ஐயமிலை ஐயமிலை ஐயா பராபரமே.

ஆகாத தீவினையும் அன்பில்லாப் பர்ம்மிடியும்
போகாதோ நின்னருளின் பொற்பாலே—ஆவா
குகனே குமரா குழகா குணஞ்செய்
அகனே சிறியனெனை யான்

என்பது முதலிய பத்துப் பாடலைப் பாடினர். அம்மாதம் வீட்டு விலக்கம் ஆகவில்லை குணவதி. அச்செய்தியை அடுத்த மாதம் 80 ஆம் தேதியன்று அறிந்து மகிழ்ந்தார்.

எம்பெருமான் நீயேதான்! ஏமாந்தேன் இத்துணைநாள்!
அம்பரர்க்கு வாழ்வளித்த அண்ணலே!—நம்புகடல்
ஓரத் திருக்கோயில் நின்றயோங் காரனென
தாரங்கொ ளென்னுளத்து நண்!
வீரக் கொடியுடைய வென்றிமயில் வாகனனே!
வீரமலம் வீறிடநீ வேல்காட்டி—நீரகத்து
நின்றாய் சிலம்பொலிக்க, நீகாட்டும் பேரருளால்
வென்றேன் புலன்களைந் துமே

என்பது முதலிய பத்துப் பாடல்களைப் பாடினர். இப்படியே திங்களுக் கொரு பத்தாகப் பாடினர். பத்தாம் மாதம் பிரசவ காலம் பிறந்தது; மீட்டும் பாட ஆரம்பித்தார்.

எந்தாய் அடியார்க் கெளியா யெரியின்மேல்
வந்தாய் குருவாய் வருவானே—செந்திலினில்
தந்தா யருள்கூருந் தாயா யெனதிடரைச்
சிந்தாய் மகவுவரச் செய்

என்ற பாடலைப் பூர்த்தி செய்த நேரத்தில், ங்ங ங்ங என்ற பிறந்த சேயின் குரல் செவியிற் பாய்ந்தது. முகுந்தர்க்கு, அது கேட்டதும் வீராவேசம் மூண்டது; உடனே,

நம்புநர்க்கு நம்பிநீ நம்பார்க்கும் மேஅருளும்
தும்பிக்கை யான்பின்னும் தோன்றலே—வெம்புகின்ற
ஆவித் துணையே அருமருந்தே கண்ணருளால்
பாவியெனைத் தள்ளாமல் பார்.

மந்திரத்தை உன்னி மயங்கா தெனக்கினியோர்
தந்திரத்தை வைக்கத் தகாதோ பராபரமே.

வேல்முருகா என்றென்று, மேற்காதல் மிக்குச்செங்
கோல்குமரா என்றென்று, கொண்டமைதி—யேல்சித்தப்
பால்குகனே என்றுமிகப் பாடிப் பதைத்துருகி
மால்மருகா என்னும் மனம்.

என்று கடைசி பாடலைப் பாடி முடித்துக் கைதொழுதார்.

குணவதி உள்ளம் குதூகலித்தது. அடியொடு மனம் மாறி யிருக்கும் முகுந்தர், குழவி பிறந்த மூன்றாம் மாதத்தில் குணவதியுடன் திருச்செந்தூர் சென்றார். முருகமுகுந்தா! முகுந்தமுருகா என்று இடைவழியெல்லாம் வாய்ஜபித்துக்கொண்டேசென்றது.

அறுமுகவன் சந்நிதியில் ஆராதனை நிகழ்ந்தது. முகுந்த முருகன் என்று பிறந்த சேய்க்குப் பெயர் சூட்டினார்.

மறுநாள் சண்முக விலாசத்தில் செந்தில் வெண்பா அரங்கேற்றத்தை நடத்துகிறார் முகுந்தர். நூல் பிறந்த வரலாற்றை அறிந்த அன்பர்கள், அகமகிழ்ந்து கேட்கிறார்கள்.

ஆறு திருமுகத்தா யாறிரண்டு தோளாளா!
வீறுதண்டை கண்ட வியன்தாளா—பேறுதரு
வேழமகள் மான்மகளை வேட்டவருள் பேராளா!
ஏழையெனை நின்னுளத்தில் எண்

என்ற பாடலை அரங்கேற்றும் சமயத்தில், திருச்செந்தூரானுக்கு அரோஹர என்று பேரொலி செய்தபடி ஒருவர் கூட்டத்தன் விரைந்தார். முகுந்தரை வீழ்ந்து வணங்கினார்.

அடியேன் ஒரு வர்த்தகன். இன்று 1000-ம் பொன் காணிக்கை சந்நிதியில் சமர்ப்பிக்க இருந்தேன். அதைத் தங்கட்கு அளிக்கும்படி, நேற்று அடியேன் கனவில் எம்மான் ஆறுமுகம் வந்தருளியது; பெற்றுக் கொள்ளுங்கள் இதனை என்று சமர்ப்பித்தார்; முகுந்தர்க்குச் சிலிர்த்தது உடல்.

செந்தில் பிரபோ! மகப்பேறு கருதினேற்குப் பொருட்பேறும் வழங்குகின்றாய்; உன்திருவருட் பெருமை யறியாது

விண்கருணை பூத்ததென்ன மேவி உயிர்க்குயிராய்த்
தண்கருணை தோன்றஅருள் தாய்நீ பராபரமே.

உளறி வழிந்த என்னை மன்னிப்பாயா! என்று கண்ணீரும் கம்பலையுமாகக் கதறுகிறார். அங்கிலை எவர் மனத்தையும் அலமரச் செய்தது..

திடீரென்று அர்ச்சகர் மேல் செந்திலான் ஆவேசித்தான். வாயாரப் பாடினார்க்கு எம்மையே வழங்குகின்றோம் காண்! பாட்டிற்களித்த பரிசைப் பாவலன் மறுப்பது மரபாகாது காண்!, அறிந்து கொள்ளும்படி யிதை உலகிற்கு அறிவித்தோம் என்று இலைவிபூதி வழங்கி, மலையேறியது ஆவேசம். உடல் சிலிர்த்தாள் குணவதி. உள்ளம் அனைவர்க்கும் உருகியது; திருச்செந்தூரானுக்கு அரோஹர என்றார் முகுந்தர். அவரைத் தொடர்ந்து பக்தர்கள் அனைவரும், வேலாயுதப் பெருமானுக்கு அரோஹரா! வல்லீ மணாளனுக்கு அரோஹரா!! தேவசேனை மணாளர்க்கு அரோஹரா!!! மயிலேறும் பெருமானுக்கு அரோஹரா ஹரோஹரா ஹரோஹரா ஹரோஹரா !!!!!! என்று கோஷித்தனர்.

வாழ்க அவனருள் வெள்ளம்.

கேட்டாயோ தோழி!

ஆசிரியர் தி. சு. வேதாசலம்பிள்ளை

தோழி! இவ்வியத்தகு செய்தியைக் கேட்டனையோ! நான் என்னவென்றுனக் கெடுத்துச் சொல்வேன்! நான் பெற்ற இன்பத்தை என்னால் எடுத்துரைக்க இயலுமோ? ஆனாலும், உன்னிடம் உண்மையை உரைக்காமல் இருக்க முடியவில்லை. ஒருவாறு கூறுகின்றேன். என்னால் உண்மையை யுணரத்தான் முடிகின்றது. உனக்கு உணர்த்த முடியாதே. ஆதலால் நீயே சிந்தித்துணர்ந்து கொள்வாயாக.

தான்பெற்ற இன்பத்தைப் பிறர்க்குணர்த்த முடியாத நிலையினைத்தான் 'அனுபூதி' யென்று கூறுகின்ற

ஆண்டநின்னை நீங்கா அடிமைகள்யாம் ஆணவத்தைப்
பூண்டதென்ன கன்மம் புகலாய் பராபரமே.

ளர். உணர்த்த முடியாதே என்று விளுகவா இருந்தார்கள். சான்றோர்கள் ஓரளவு கூறித்தான் முடித்தார்கள். அவ்வாறு கூறியவைகளில் ஒன்று கந்தரனுபூதி.

ஆகவே, என் கதையை உனக்கு ஓரளவு கூறுகின்றேன்; கேட்பாயாக. கேட்டுவிட்டால் மட்டும் போதுமா? நீ நன்குணர முற்படவேண்டும். சர்க்கரை இனிக்கும் என்று இனிப்புச்சுவை யுணராத ஒருத்தியிடம் கூறினல், அவ்வினிப்புச் சுவையை எவ்வாறு உணரமாட்டுவாள். அவ்வினிப்புச் சுவையை யுணரச் சிறிது சர்க்கரையை வாயிலிட்டு, உணரும்படி செய்தபின்பன்றே அவள் சுவை இத்தகைய தென்றறிவாள்.

கேட்டாயோ தோழி

அதுபோலவே, நான் நுகர்ந்த இன்பத்தை நீயும் நுகரவேண்டும் என்பது என்னுடைய ஆசை. ஆதலால் நான் சொல்வதைக் கவனித்துக் கேட்பாயாக.

தோழீ! ஒருநாள் நான் ஓர் ஊருக்குப் போய்வர வேண்டுமென் றெண்ணினேன். அப்போது கோடைக் காலம். விடியற் காலையில் புறப்பட்டுப் போவது நல்லது என்றெண்ணினேன். சூரியன் புறப்பட நானும் வீட்டை விட்டுக் கிளம்பினேன். நான் போகும் ஊர் நீண்ட தொலைவி லிருக்கிறது என்று மட்டும் கேட்டதுண்டு. எப்பொழுதுமே துணையின்றி தனிவழிப் போயறியாதவள். மேலும் போகுமிடத்துக்கு வழியும் எனக்குத் தெரியாது. என்ன செய்வதென் றெண்ணினேன். யாரையாவது கேட்டுக்கொண்டு எப்படியாவது போய்விட வேண்டும் என்று துணிந்து விட்டேன். சிறிது தூரம்

எங்கனும்நீ யென்றால் இருந்தபடி எய்தாமல்
அங்குமிங்கும் என்றலையல் ஆமோ பராபரமே.

என்மனம்போற் போனேன். அங்கே ஒரு கிழவனர் எதிர்நோக்கி வந்துகொண்டிருந்தார்.

அப் பெரியவரைப் பார்த்து, பெரிய தாத்தா! வணக்கம். முத்தர் வாழும் முத்தியூர்க்கு எந்த வழியாகச் செல்லவேண்டும் என்று அவரைக் கேட்டேன். அவர் இவ்வழியே சிறிது தூரம் சென்றபின், முல்லைநிலம் வழியாக நீண்டதூரம் செல்ல வேண்டும். அப்படிச் சென்ருல் கடைசியில் அவ்வூர் தென்படும் என்று கூறிவிட்டுத் தன் வழியே போய்விட்டார்.

நானும் முத்தியூரை யடைந்து முத்தரைச் சந்தித்து முத்தியின்பம் பெறவேண்டும் என்னும் பேரார்வத்தோடு அங்கிருந்து புறப்பட்டேன். வழிநெடுக சிறுசிறு காடுகளும், புன்செய் நிலங்களும் ஒரே பரவலாகக் காணப்பட்டன.

சிறு சிறு காடுகளை நான் கடந்துவிட்டேன். அதற்கடுத்தாற்போல் புன்செய் நிலங்கள் வழியாகவே அவ்வழி செல்கின்றது. கண்களுக் கெட்டியதூரம் மரங்களோ ஊரோ தென்படவில்லை. எவ்வா றிருந்தாலும் முத்தரை யடையவேண்டுமே. ஆகையால் வானத்தே பறக்கும் அப் பறவைபோல் விரைந்து சென்றேன்.

புன்செய் நிலங்கள் புழுதி யுள்ளவைக ளாகவே இருந்தன. கதிரவன் கடுவெயிலால் புழுதிமண் நன்கு சூடேறிவிட்டது. பகல் பன்னிரண்டு மணி யிருக்கலாம். வழியிலுள்ள புழுதிமண் என்கால்களைக் கொப்புளிக்கச் செய்துவிட்டது. மேலே வெப்பம் தலையைத் தீய்க்கின்றது. அனற்காற்றே எங்கும் வீசுகின்றது. எனக்கு நாவோ வறண்டுவிட்டது. எங்குங் கானல் நீர் காணப்படுகின்றதே யன்றிப் பருகுநீருள்ள குளங் குட்டைகள்

கற்குமது உண்டு களித்த தல்லால் நின்னருளில்
நிற்குமது தந்ததுண்டோ நீ தான் பராபரமே.

காணப்படவில்லை. எங்கேனுஞ் சிறிது நேரந்தங்கிச் செல்லலா மென்ருலோ தழைத்த மரமொன்றேனும் கண்களுக் கெட்டிய தூரம் வரையிற் காணப்படவில்லை. கால்கள் தள்ளாடின, கண்கள் கலங்கின; செய்வதின்ன தென்றறியாமல் வழி நடந்தேன். என் நிலையை உணர அங்கு எவரேனு முண்டோ! என் மூத்தர் ஒருவர் தானே யறியவல்லர். அவர் என்னை விளையாட்டுப் பருவத்தில் மணந்தவர். மீண்டும் என்னை வந்து பார்த்தறியார். என் மனமோ அவரையே நாடி நின்றது. கதி கலங்கினேன். மூத்தர்க்கருளு முத்தா! முதல்வா! ஏழைச் சிறுமி என் றிகழாது என்னைக் காத்தருளாயோ! அடியாரை யாளும் அன்பே! என்றலறினேன். அதுதான் எனக்குத் தெரியும் என்று கூறி முடித்தேன்.

என்தோழி! "என்னடி மறைக்கின்ருய். பின் நடந்த தென்ன என்பதைக் கூருமல் விட்டு விட்டனையே; இது தான் நீ நுகர்ந்த இன்பமோ?" என்று பரிகாசத்தோடு கேட்டுவிட்டு உண்மையை யுரை என்ருள்.

நானும் புன்முறுவலோடு உண்மையை யுரைக்க லுற்றேன்.

நான் அலறினேன் என்று கூறினேனல்லவா, மயங்கி வீழுஞ்சமயம், என்னருகிலேயே இயற்கையா யெழுந்த தெள்ளிய ஊற்று நீரையுடைய ஓடையொன்று காணப் பட்டது. மெதுவாகத் தளர்ந்த நடையோடு ஓடைக்குச் சென்று கைமுகங் கால்கழுவி நீறணிந்துகொண்டு முத்தா! முத்திதர வல்லாய்! என்று கூறிக்கொண்டே என்னிரு கைகளாலும் அந்நீரை வணங்கி யள்ளிப் பருகி னேன். அந்நீரின் சுவையை என்னென்பேன்! தெங்கின் இளநீருங் கெட்டது. அத்துணை இன்சுவை யுடையதாக

அண்டபகி ரண்டம் அறியாத நின்வடிவைக்
கண்டவரைக் கண்டாற் கதியாம் பராபரமே.

இருந்தது. எனக்கோ களைப்பு மிகுந்துவிட்டது. எங்கேயாவது சிறிதுநேரம் படுக்கலாம் என எண்ணினேன். என்னருகிலேயே ஓடையின் கரைமேல் நன்கு தளிர்விட்டு இலைகள் நெருங்கிக் குளிர்ச்சி பொருந்திய மாமரமொன்று தென்பட்டது. அதன் கீழே படுத்துறங்குவதற் கேற்ற படி மேடை யொன்றுங் காணப்பட்டது. அம் மேடைமேல் முத்தரை நினைந்து படுத்தேன்; அத்துணை வெப்பமுடைய கோடையில் வீசும் அனற்காற்று, ஓடையின் நீரிற் படிந்து, அங்கலர்ந்திருந்த தாமரை நீலோற்பலம் முதலான மலர்களிற் படிந்து, அவைகளின் மணத்தை யள்ளிக் கொண்டு என்மேல் மென்மையாக வீசிற்று. மாமரத்தி லிருந்த மாம்பூவின் மணமும் அம் மணத்துடன் கலந்தது. என் மனத்தைக் கொள்ளை கொண்டது. அப்போது நான் பெற்ற பேற்றை என்னென்றெடுத் துரைப்பது! அவ்விடமே என் முத்தர் வாழும் முத்தியூராகப் பட்டது. முத்தர்தான் என்னுள்ளத்தைக் கொள்ளை கொண்டு மெல்லிய பூங்காற்ருக என்னுகங் கலந்தார் போலும். அப்போது நான் நுகர்ந்த இன்பத்தை எவ்வாறெடுத்தியம்புவேன் தோழி! நீயே சிந்தனை செய்.

பின்னரவரைக் கண்டிலேன். அவரைப் பாடியாவது பரவலாம் என்றெண்ணிக் கீழ்வரும் பாடலை ஆரமாக அணிந்து கொள்ளுமாறு வேண்டினேன்.

அவ்வேண்டுகோ ளிதுவாகும்

அருட் பெருஞ் சோதி யருட் பெருஞ் சோதி
தனிப் பெருங் கருணை யருட் பெருஞ் சோதி
கோடையிலே யிளைப்பாற்றிக் கொள்ளும்வகை கிடைத்த
குளிர்தருவே தருநிழலே நிழல் கனிந்த கனியே

கலக்கமுற நெஞ்சைக் கலக்கிப் திரும்பத்
துலக்குபவன் நீயலையோ சொல்லாய் பராபரமே.

ஓடையிலே யூறுகின்ற தீஞ்சுவைத்தண் ணீரே
உகந்ததண்ணீ ரிடைமலர்ந்த சுகந்தமண மலரே
மேடையிலே வீசுகின்ற மெல்லியபூங் காற்றே
மென்காற்றில் விளைசுகமே சுகத்திலுறும் பயனே
ஆடையிலே யெனைமணந்த மணவாளா பொதுவில்
ஆடுகின்ற வரசேயென் னலங்கலணிந் தருளே.

அருட் பெருஞ் சோதி

கீதையின் சாரம்

K. S. சுந்தரமூர்த்தி. புவனகிரி.

இறை வணக்கம்

ஐவகைப் பொருளு நான்கு கரணமுங் குணங்கள் மூன்றுஞ்
செய்வினை யிரண்டு மொன்றி யாவரும் திகைப்ப நின்ற
பொய்யிரு ளகல ஞானப் பொருட்கதிர் விரித்த புத்தேள்
கைவளை யாழிச் செங்கட் கண்ணனைக் கருத்துள் வைப்பாம்

குரு வணக்கம்

மாதையர்கோன் வேதநவில் வாய்வேங் கடநாதன்
காதையுறப் பார்த்தனுக்குக் கண்ணனருள்—கீதைக்
கருத்துயர்தா லாட்டாகக் கட்டுரைத்தான் யாருங்
கருத்துயர்தீர்ந் தெய்தக் கறி.

உலகெல்லாம் உணர்ந்து ஓதுதற்கரிய ஒப்பற்ற ஒருவன், அலகில் சோதியாய் ஒளிரும் ஆண்டவன், அடியவர் உள்ளத்திலே இமைப்பொழுதும் நீங்காமல் இருக்கும் இறைவன், பக்குவ மெய்தியவர்களுக்கு பரம குருவாய்த் தோன்றி யருளுபவன் எவனோ? அவன்தான் பெருமை பொருந்திய மெய்ஞ்ஞானத்தை, பாண்டவரிலே ஒருவனாகிய பார்த்திபனுக்கு அருள்செய்ய அவனது

சிந்தையும்என் போலச் செயலற் றடங்கிவிட்டால்
வந்ததெல்லாம் நின்செயலா வாழ்வேன் பராபரமே.

திருத்தேரிலே சாரதியாய் அமர்ந்து ஞானசிரியாக வந்த இறைவன்,

"நவில் தொறும் நாவிலே இன்பமளிக்குமாறும், கேட்டமாத்திரத்தில் காது குளிருமாறும், உணருந் தொறும், உணருந்தொறும் உள்ளத்திலே தெள்ளமுதாய் தித்திக்குமாறும், சிந்திக்குந்தொறும் சித்தத்திலே பத்தியை ஊட்டுமாறும், கட்டுண்டு கிடக்கும் விலங்கைப் பட்டெனத் தெறித்து சுதந்திரத்தை ஆத்மா அடைய வழி காட்டுபவன் எவனோ? அவன்தான் கீதையின் உட்பொருளை நமக்கு அளித்த ஆரியன்.

"நவில் தொறும் நூல்நயம் போல்" என்று அன்று ஒரு தமிழன் சொன்னான். இன்று நாம் கீதையைப் பயில் தொறும் நற்பண்பு நம்மிடையே ஒளிர்வதைக் காண்கிறோம். தோழா! இன்பம் எதில் இருக்கிறது என்று உனக்குத் தெரியுமா? தெரிந்திருந்தால் ஏன் இப்படி திகைத்து நிற்கிறாய். நான்கு அணா கொடுத்து ஒரு அல்வாத்துண்டு வாங்கி வாயிலே போடுகிறாயே? அந்த இனிப்பு எதுவரையில் இருக்கிறது? தொண்டைமட்டுந் தானே? அதற்கு மேலும் தித்திப்பு இருக்கிறதா? இல்லையே. அன்றியும், அந்தச் சுவையை ஒரு புலன் மட்டுந் தானே அனுபவிக்கிறது. மற்றும் எஞ்சியுள்ள புலன்கள் அனுபவிக்கமுடிகிறதா? முடியவில்லை. அப்படியானால் இந்த ஐம்புலன்களும் ஒரே சமயத்தில் இன்பம் பெற இயலுமா? இயலும். எப்பொழுது?

நமது தோலெல்லாம் குழைந்து, அதைச் சூழ்ந்திருக்கும் நரம்பனைத்தும், மேலெல்லாம் கட்டவை விட்டு விட்டு

பந்தமெலாந் தீரப் பரஞ்சோதி நீ குருவாய்
வந்த வடிவை மறவேன் பராபரமே.

இயங்கி, எலும்பெலாம் நெக்கு நெக்குருகி நெகிழ்ந்து, என்புடைத் தசை யெல்லாம் மெய்புறத் தளர்ந்து, இரத்தம் அனைத்தும் உள்ளிறுகி, சுக்கிலம் உரத்திடைப் பந்தித்து, ஒருதிரள் ஆகி, மடலெல்லாம் மூளை மலர்ந்து, அமுதம் உடலெல்லாம் ஊற்றெடுத்தோடி நிரம்பி, ஒண்ணுதல் வியர்த்திட, ஒளிமுகம் மலர்ந்து, தண்ணிய உயிர்ப்பினில் சாந்தம் ததும்பி, உள்நகை தோற்றிட உரோமம் பொடித் திடக், கண்ணில் அருவி யென நீர் பெருகி கால்வழிந் தோடி, வாய் துடித்து அலறியும், வளர் செவித்துளை களில், கூய் இசைப் பொறியெலாம் கும்மெனக் கொட்டி உடலெலாம் குளிர்ந்து, மார்பசைந்து கையெலாம்குவிந்து காலெலாம் சுலவிட, மனங் கனிந்து கனிந்துருகி, மதி நிறைந்து ஒளிர்ந்திட, இனம்செறு சித்தம் இயந்துகளித்து, அகங்காரம் ஆங்காங்கு அதிகரிப்பமைந்து, சகங்கான உள் ளம் திழைத்து மலர்ந்து, அறிவுரு அனைத்தும் ஆனந்தம் ஆகி, பொறியுறும் ஆன்ம தற்போதமும் போயிட, தத் துவம் அனைத்தும் தாம் ஒருங்கொழிந்து, சத்துவம் ஒன்று மாத்திரம் தனித்து நின்று ஓங்கிட, உலகெலாம் விடயம், உளமெலாம் மறைந்து, அலகிலா அருளின் ஆசைமேல் பொங்கி நமது உளத்தெங்கும் புகுந்து, உயிரெலாம் மலர்ந் திட நமது உள்ளத்திலே ஓங்கி நிற்கும் உண்மை அன்பாம் அருளிறைவனை அறியும் பொழுது, நம்மில் ஒவ்வொரு வரும் அறிவோம்.'' இன்பம் எதில் இருக்கிறதென்று.

இந்த இன்பவாரிதியிலே மூழ்கிமூழ்கி எழுந்தவர்தாம் அவனது அடியார். வாழையடி வாழையென வந்த அத் திருக்கூட்ட மரபினிலே உதித்த தோன்றலான அடியார்

அல்லெல்லாந் தீரஎனக் கானந்த மாகவொரு
சொல்லை எனபால் வைத்ததையென் சொல்வேன் பராபரமே.

ஒருவர். "தாம் பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம்" என்ற உயர்ந்த எண்ணங்கொண்டு வேதநான்கின் உட் பொருளாகிய நாதனும் கண்ணன் உரைத்த கீதையை, மன்பதைகள் பொருட்டு தாலாட்டுப் பிரபந்தமாக ஆக்கி, அனைவரும் உய்ய அருளினன்.

அந்த அகண்டாகாரமான பேரின்ப வெள்ளமானது பொங்கித் ததும்பி பூரணமாய் ஏக உருவெடுத்து வரும் இந்தவேளையிலே நான்மட்டும் அனுபவிக்காமல், தோழரே உங்களையும் அழைக்கிறேன், வாருங்கள். வந்து பாருங்கள். துன்ப நீக்க மற்று இன்ப ஆக்கம் பெறுங்கள். காக முறவு கலந்துண்ணக் கண்ட நீங்கள், இன்புற்றிட இனி யெடுத்த தேகம் விழுமுன் புசிப்பதற்குச் சேரவாரும் செகத்தீர்.

[பாண்டு புத்திரர்களாகிய பஞ்ச பாண்டவர்கள், சகுனி இழைத்த வலையில் சிக்கி, சூதாட்டத்தில் நாடுநக ரங்களைத் தோற்று, முடிவில் தம் தம்பிமார்களோடும், பத்தினி திரௌபதியோடும் தருமபுத்திரர் பன்னிரண்டு ஆண்டுகள் வனத்தில் வசித்தபின் ஓராண்டு அஞ்ஞாதவாச மும், விராடநகரத்தில் வாழ்கின்றபோது துரியோதன னுடைய கும்பல் பசுக்கூட்டங்களைக் கவர்ந்து கொண்டு போக, அப் பசுக்களை மீட்டு, தங்களுக்கு உரிமையான அரச பாகத்தை தங்களிடம் திரும்பத் தருமாறு தூது செலுத்த, துரியோதனன் நாடுதர மறுத்து, போர் செய் வேன், அதில் அவர்கள் வெற்றிபெற்றால் அடையலாம். இப்பொழுது அவர்களுக்கு நான் ஊசி குத்தும் அளவுள்ள இடங்கூடத் தாரேன் என்று கூறிய துரியோதனாதிகளும்

சிந்தை மயக்கறச் சின்மயமாய் நின்றஉன்னைத்
தந்தவுனக் கென்னை யும்நான் தந்தேன் பராபரமே.

மற்ற அரசர்களும், சேனைகளும் துகள்பட்டு அழிய, வரிகளுடன் கூடிய காண்டீபமென்ற வில்லையுடைய விஜயன் போர் செய்யப் புறப்பட்டான்.]

பாரதப் போர் மூண்டது. இருபுறமும் இருதிறத்தாருடைய சேனைகள் அணிவகுத்து நின்றன. காண்டீபனுக்குக் கண்ணன் வாக்களித்த பிரகாரம், சாரதியாய்த் தேர் செலுத்தி வருகிறான்.

கண்ணன் :—பார்த்திபா, அதோபார்! எதிரே துரியோதனனுடைய சேனைகளை. பலிபீடத்திற்கு வரும் ஆடு மாதிரி உன்னுடைய காண்டீபத்திற்கு இரையாகப் போகும் பொறாமையே உருவான துரியோதனாதிகளைப் பார். உங்களைச் சூதாட்டத்தில் ஏமாற்றி உங்களுக்கே உரியதான நாட்டைக் கைப்பற்றி, சொன்ன வாக்கை நிறைவேற்றாத கொடுங்கோல் அரசனான துரியோதனாதிகளைப் பார். கற்புக்கனலான உங்கள் பத்தினியாம் திரௌபதியின் கூந்தலைப் பற்றித் துயிலுரித்த கொடும் பாவியாம் துச்சாதனனைப் பார். வஞ்சம் புரியச் சூதுக்கழைத்து, நஞ்சு கலந்த சொல் உள்ளேயும் கொண்டு, பஞ்ச பாண்டவர்களான உங்களை நாடு கடத்திய நயவஞ்சக நாடோடியாம் அந்தச் சகுனியை, சபையில் துரியோதனனுடன் கூடிக்கொண்டு கேலிசெய்த கர்ணனைப் பார்! நன்றாகப் பார் காண்டீபா. நன்றாகப் பார்த்துக்கொள். உன்னுடைய வஞ்சத்தைத் தீர்த்துக் கொள்ள இதுதான் சமயம். அர்ச்சுனா! எடு வில்லை, தொடு அம்பை, விடு அவர்கள் பேரில்.

(தொடரும்)

எல்லாம் நினதுசெயல் என்றெண்ணும் எண்ணமும் நீ
அல்லால் எனக்குளதோ ஐயா பராபரமே.

GREATNESS

There is nothing great or small except what the human mind conceives it to be. In the world of devotion, there is only one who is great and that is God. Great is His power and great is His mercy. His greatness is visible in His qualities. Nowhere perhaps are His divine qualities more fully or adequately described than in the Gita in Sri Krishna's words. Even there the description is but an attempt. The divine qualities are beyond description. One can point out to some great qualities, but can only end with saying that words of description fail as a measure of the greatness of the divine qualities.

Man, by his inscrutable power of mind and assimilation, can make his own as much of the divine qualities as his capacity allows. The constant thought of god as the all-pervading entity of goodness and power will make his life a living expression of divine qualities. God lives in the heart of every being. It is up to us to make Him manifest who is only immanent. The miser who has untold riches is only an immanent rich man. His riches are of no use to him or the world. The great man who holds his riches for the good and the suffering is the manifest rich man of divine qualities. Even so, the man who, in constant thought of God, brings into manifestation the

divine qualities of love, service and grace in his daily conduct, imbues himself with the greatness of God in proportion to the success of his endeavour. In several places, posts and positions, that are regarded as being great or high, you find men who are small, of little stature, as little as the circumscribed limits of their own selfish satisfaction arising from power or pelf. In positions, which in a worldly way, may be regarded as low or humble, you find men who are as great as the universe, for they have within, the boundless limits of their over-flowing love immersed in the entire creation. Association leads to integration. Constant thought and meditation of the Lord will fill the mind of man with His divine qualities. God's greatness is a part of Himself. He dwells in every heart in His immanence. Immanenty all is hence great. But the great man is he who makes his being the manifest abode of divinity. Devotion, love, humility, sacrifice, service, self-knowledge—these alone will lead life to sovereign greatness.

(*Thiruppugal Mani*)

"பத்திநீ பத்திக் கான பலனுநீ பலவாச் சொல்லுஞ்
சித்திநீ சித்தர் சித்தித் திறமுநீ திறமாச் மோன
முத்திநீ முத்திக் கான முதலுநீ முதன்மை யான
புத்திநீ எனக்கொன் றுண்டோ பூரணானந்த வாழ்வே."

(தாயுமான சுவாமிகள்)

ஷண்முகம் பிராண்டு

புதிய ஸ்டீல் டிரங்கு & சூட் கேஸ்கள்
நூதன முறைகளில் நீடித்த
உழைப்பிற்காக
உறுதியானதும் உத்திரவாதமுமான
சரக்குகள்.

ஷண்முகம் பிராண்டு ஸ்டீல் டிரங்கு ஒர்க்ஸ்
புரொப்ரைட்டர் :
சி. ஞானசுந்தர நாயகர்
341, எஸ்பிளனேட், சென்னை—1.
ஷோ ரூம் : 1-14, பேக்கர் தெரு,
சென்னை-1

நம்பிக்கைக்கும் நாணயத்திற்கும் உங்கள் நன்மதிப்புபெற்ற
நகை வியாபாரிகள்

"ஸ்வர்ண மாளிகை"

A. S. S. M. சோமசுந்தர செட்டியார் & Co.,
தங்கநகைகள், வெள்ளிப் பாத்திரங்கள் வியாபாரம்
124, தெற்காவணி மூல வீதி மதுரை.
Tel:—"FAITH' Estd:—1924 Phone:—118

வியாபாரக்குறி

N. K. M.
தங்கநாடா

நம் நாட்டுத் தொழில்களில்
சிறப்புவாய்ந்த கைத்தறியால்
சிறந்த நூதன முறைகளில்
தயாரிக்கப்பட்ட
பட்டு, நூல் ஜவுளிகளுக்கு
நம்பிக்கையான இடம்.



கருப்பண முதலியார் ஸ்டோர்ஸ்
மொத்தம் அண்டு சில்லரை வியாபாரம்,
53. கிடங்குத் தெரு, மதராஸ் 1.

Printed by K. V. Jagannathan at the National Art Press
91, Mount Road, Madras—18
Edited & Published by S. Muthuswami, 54, Bunder St. Madras